உ


சிவ சிவ

# அன்புநெறி

மலர் - 8 டிசம்பர் 2003 இதழ்- 5

$1.00

## திருவாதிரை மலர்



காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

\- மாணிக்கவாசக சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. ILLANGO & ASSOCIATES

DENTAL HOSPITAL (OPEN 7 DAYS A WEEK)




**உங்கள் சேவை கருதி இரு இடங்களில் வாரத்தின் ஏழு நாட்களும் பல் வைத்திய நிபுணர்களின் சேவைகள்.**

## Dr. M. Illango

B. D. S, D orth(Oslo)
General Practioner Mainly Orthodontics

## Dr. S. Raveendran

B.D. S., M.S, F. D. S. R. C. S. (Eng.)
General Practioner

## Dr. Ali Adibfar

D.D.S. M.D., Plastic Surgeon

## Dr. Janaki Illango

B. D. S. Family Dentistry

## Dr. Felomina Nilasco

D. D. S Family Dentistry

**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. E., # 303
Scarborough, ON
**(416) 292 -7004**

**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**



# செல்வசேகரா

**நகைமாளிகை**

*Canada Ltd.*

*Selvasegara Jewellers*

**22 கரட் தங்கநகைகளின் முன்னோடிகள்!**

***The Leaders in 22K Gold Jewellery!***

***Tel:*** **(416) 285-7269**

***2347 Eglinton Ave. E., Scarborough, Ontario***
***(1 Block West of Kennedy)***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவ சிவ

# அன்புநெறி

| மலர் 8 | சுபானு: கார்த்திகை - மார்கழி, டிசம்பர் 2003<br>திருவள்ளுவர் ஆண்டு - 2034 | இதழ் 5 |
|---|---|---|

**பொருளடக்கம்** **பக்கம்**

1. திருவாசகம் காட்டும் ஆன்மாவின் பரிணாம . 2
2. வாழ்த்துரை . . . . . 5
3. அருள் வாழ்த்துரை . . . . 6
4. வாழ்த்துரை—அன்புக்கு அரிய பசளை திருவாசகம். 7
5. அன்புநெறி—திருவாதிரைமலர் வாழ்த்துரை . 9
6. வாழ்த்துரை . . . . . 12
7. திருவாதிரையும் திருவெம்பாவையும். . . 13
8. மன்றச் செய்திகள். . . . . 17
8. குருநெறி என்னும் பெருநெறி 18
9. பாவைநோன்பு . . . . . 24
10. திருவாசகம் முற்றோதுவதோடு முடிந்ததா?. . 27
11. திருவாதவூரடிகள் புராணம் – ஓர் தோற்றுவாய் 30

**சிறுவர் பகுதி**

12. மாணிக்கவாசகர் திருவாசகம் . . . 36

**ஆசிரியர்** : திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம்
**நிர்வாக ஆசிரியர்:** திரு. தி. விசுவலிங்கம்
**வெளியீடு:** சைவசித்தாந்த மன்றம், கனடா

திருவாசகம் என்பது இன்பத் தேன். ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல் மலர் வாய்ப் பிறந்த வாசகத் தேன். தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளை நீக்கி அல்லல் அறுத்து ஆனந்தமாக்குந் தேன். சிவப்பிரகாசரும் இராமலிங்க சுவாமிகளும் இத்தேனைப் பருகித் தம் அனுபவத்தால் வியந்து கூறுஞ் செந்தமிழ்த் தேன்.

பாய்பரியோன் தந்த பரமானந்த தப்பயனை
தூயதிரு வாய்மலராற் சொற்செய்து – மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன் (திருக்களிற் : 73)

என உய்யவந்த தேவனார் போற்றிப் புகழ்ந்த தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சித்தாந்த மன்றம், கனடா
Saiva Sidhdhantha Manram, Canada 1008-50 Elm Dr. E.,
Mississauga, ON L5A 3X2 Canada (905) 566-4822

# திருவாசகம் காட்டும் ஆன்மாவின் பரிணாம வளர்ச்சி



திருவாசகம் மாணிக்கவாசக சுவாமிகளின் அகவரலாறு; ஒரு ஆன்மாவின் பரிணாம வளர்ச்சியைத் தெளிவாகக் காட்டுகிறது. ஆன்மா அதன் பயணத்தை இறைவனின் கருணையினால் கருவூரில் தொடங்குகிறது. திருவூரில் பயணம் நிறைவுறும். பயணம் செவ்வியதாக அமைந்தால் எளிதில் திருவூரை ஆன்மா அடையும். பல ஆன்மாக்கள் தத்தம் விருப்பம் மேவிய தடத்தின் வழியே மட்டும் பயணம் செய்வதன் விளைவாகப் பயணம் நீட்டிக்கவும் செய்யலாம்.

இறைவனின் கருணையே உயிர்களின் பயணத் தொடக்கத்திற்குக் காரணம். பயணங்கள் நிகழ்வதற்கும் மாறுவதற்கும், முற்றுப் பெறுவதற்கும் ஆன்மாவின் வாழ்நிலையே காரணம். ஒரு ஆன்மா மானுட நிலை எய்துதலே கூடப் பல பிறவிகளுக்குப் பிறகுதான்! மனிதன் மிருகமும் அல்லன்; தெய்வமும் அல்லன். மனிதன் மிருகத் தன்மையில் இருந்து விலகி மானுடத் தகுதியைப் பெற்று மெய்ம்மை நிலையையும் தெய்வத் தன்மையையும் அடைதலே ஆன்மாவின் பயணக் குறிக்கோள்; பயன்! மாணிக்கவாசகரிடம் ஆன்ம வளர்ச்சிக்குரிய தகுதி இன்மைகளுக்குக் கழிவிரக்கம் கொள்ளல், ஆராக் காதலுடன் உண்மையை நாடுதல், இறைவனைத் தேடுதல் முதலிய தகுதிகள் அமைந்திருந்தன. தகுதியில்லாதோர் தகுதி நோக்கி வளர்தலே வாழ்வு.

ஆன்மா தன் இதயத்தை – சிந்தனையைத் திருவருளிடத்தில் நிறுத்தித் தன் செயலைச் செய்யுமாயின் குறையினின்றும் விலகி நிறைவுபெறும். அறியாமையிலிருந்து விலகி அறிவு பெறும்; வாழ்க்கை வடிவம் பெறும்; நிறை நலம் பெறும். இன்ப அன்பினை எய்தும். இதற்கு மாணிக்கவாசகர் வரலாறு சான்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சியல் வாழ்க்கையில் இருந்து மாணிக்கவாசகர் திருப்பெருந்துறைக்குக் குதிரை வாங்கப் போன நாள் முதல் அவர் தம் வாழ்க்கையில் அற்புதமான மாற்றம் ஏற்பட்டது. தவமே மேலிட்டது. ஊராரை மறந்தார். உற்றாரை மறந்தார்; இறை பணியில் நின்றார். திருப்பெருந்துறைச் சிவன் மாணிக்கவாசகரைத் தேடி வந்து ஆட்கொண்டான்! மாணிக்கவாசகரை திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் ஞானாசிரியனாக வந்தருளி ஐந்தெழுத்தருளி ஆட்கொண்டு அருளினான். இதனை

"நானேயோ தவம் செய்தேன்; சிவாயநம எனப் பெற்றேன்"

என்று வியந்து கூறுகின்றார்.

சிவநெறி ஒழுக்கத்திற்குரிய தகுதிப்பாடுகளுள் ஒன்று "தாழ்வெனுந் தன்மை". தாழ்ந்து பழகும் இயல்பில் தான் வளர்ச்சியின் அமைவு இருக்கிறது.

"தாழ்வெனும் தன்மை நோக்கிச்
சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அரிது"

என்று அருணந்திசிவம் கூறுவார்.

ஆணவமலம் வேரோடு நீங்கியமையால், அவரது திகைப்பு முற்றும் நீங்க, சிந்தை தெளிந்தது. முழுஞானம் கைவரப் பெற்றார். சீவன் முத்தர் ஆனார்; இறப்பு என்ற பொது நிலையிலிருந்து தப்பினார். இறைவனது திருவடி இன்பத்தை அவனால் நல்கப் பெற்று ஆரத்துய்த்தார். அந்நிலையிலும், அவன் ஆண்டவனாகத் தாம், அடியவராக இருந்து, ஆனால் தற்போதம் இழந்து, "தாம் துய்க்கின்றோம்" என்ற நினைவின்றி, என்றும் நீங்காத பேரின்பமாகிய ஆனந்தம் பெற்றார். இதனைத் தாம் சிவம் ஆனதாகக் குறிக்கின்றமையால் உணர்த்துகின்றார். இங்கு அனுபவம் இருந்தது. ஆனால் தாம் அனுபவிக்கின்றோம் என்ற ஆன்ம போதம் இல்லை.

"இந்திரிய வயம் மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்து போய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவமாக்கி என்னை ஆண்டான்" என்ற சொல்லாட்சி கவனிக்கத்தக்கது.

மற்றும், இறைவன் இதற்கு முன்னர், தமது கன்ம மலத்தை நீக்கினான், வினை அறுத்தான் என்பதையும்,

"வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச் சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப் பெரிதும் ஆட்கொண்டு என் பிறப்பத்த இணையிலியை
அனைத்துலகும் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே"

என்ற பாடலில் தெளிவாக்குகின்றார். ஆக, அவரைப் பற்றியிருந்த பேரழுக்குகளாகிய மும்மலமும் நீங்கின. மற்றும் இறைவன் முன்பே தமது பசுஞானம் கழன்று நீங்கச் செய்தமையை,

"பல்லோரும் காண என்றன் பசுபாசம் அறுத்தானை" என்று இறைவன் மதுரைக்குக் குதிரையின்மேல் வந்த நிகழ்ச்சியுடன் தொடர்புபடுத்திக் கூறுகின்றார்.

எனவே "முத்திநெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனைப் பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறுவித்து" என்றார். மனமாசுகளுக்கு எல்லாம் ஒரே காரணம் ஆணவ மலம் உயிர் அறிவை மறைப்பதாகும். அந்த மலத்தை உயிரைப் பிடித்த மலம் என்பார், சித்த மலம் என்றார்.

அதனைச் சிவபரம்பொருள், வேருடன் களைந்து, அன்பினால் சார்ந்து நிற்கும் தமமைச் சிவமாக்கினான், மற்றும் தம்மைச் சதா சர்வ காலமும் தன் திருவடியில் வைத்து ஆள்கின்றான். என்பார்.

"சிவமாக்கி எனையாண்ட அத்தன்" என்றார். இந்நிலையை அவனால் பக்திநெறி – அன்புநெறி அறிவிக்கப் பெற்று திருவருள் வழியே, அன்பினால் ஆவியும் உடலும் நைந்துருகி வாழ்பவர் அன்றி, வேறு யாரும் பெற முடியாது. விண்ணவரும், மாலும் அயனும் பெற்றிலர் என்பார்.

"அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே" என்று கூறுகின்றார்.

மாணிக்கவாசகர் இம்மை வாழ்விலேயே இருள்மலம் நிங்கப் பெற்றுச் சிவப்பேறு நல்கப் பெற்றமையால், அவர் சீவன்முத்தர் ஆனார்.

ஆசிரியர் தி. வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருப்பனந்தாள் ஆதீன முதல்வர் கயிலை மாமுனிவர் திருவளர் திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் அவர்களின்

## வாழ்த்துரை

"கலந்த அன்பாகி" "அன்போடு உருகி", "அகம் குழைவார்க்கு" "அன்புறு சிந்தையர்" "ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்" என்று, இறைமையிடம் வைக்கும் அன்பைச் சமயச் சான்றோரும் கவிஞர்களும் போற்றிப் புகழ்வர் அத்தகு மேன்மை மிகும் அன்பை வலியுறுத்தும் முகமாக, **அன்புநெறி** என்னும் பெயர் தாங்கி கனடா, சைவசித்தாந்த மன்றத்தின் வழி வெளியிடப் பெறும் திங்களிதழின் மார்கழி இதழ் திருவாதிரை மலராய் வெளிவருவது அறிந்து மகிழ்ச்சி.

அத்தன் ஆரூரனின் ஆதிரைநாள் சிறப்பைப் பற்றிப் பதிகம் பயின்ற, ஓதக் கேட்ட உள்ளங்களுக்கு ஆதிரைநாளின் அருமை தெற்றெனப் புலப்படும்.

"ஆதியன் ஆதிரையன்" "ஆதிரை நாயகன்" ஆகிய அத்தனின் ஆதிரை நாள் சிறப்பைப் பகரும் பைந்தமிழ்க் கருத்தோவியங்களுடன் ஆதிரை மலர் அழகு மிளிர வெளிவந்திடச் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்.
சிவ சிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23 ஆவது குருமகாசந்நிதானம்
**சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க"

# அருள் வாழ்த்துரை

"இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே."


கனடா சைவசித்தாந்த மன்றத்தால் "அன்புநெறி மார்கழி திருவாதிரை மலர்" உருவாகும் செய்தி கேட்டு மகிழ்ச்சி அடைகிறோம்.

சிவமணம் கமழும் இச்சீரிய நூலினை வெளியிட்டு சைவத் தொண்டுகள் இயற்றி வரும் கனடா, சைவசித்தாந்த மன்றத்திற்கு சிவபிரான் திருவருள் கூடி எல்லா நலன்களும் சிறக்க வேண்டுமென்று நமது வழிபடு கடவுளாகிய அருளமிகு ஞானப் பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

அருளாணையின்வண்ணம்

சிவ சிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புநெறி சிறப்பாசிரியர் கலநிதி கவிஞர் வி.கந்தவனம் அவர்களின் வாழ்த்துரை

## அன்புக்கு அரிய பசளை திருவாசகம்

மார்கழி என்றால் சைவ நன்மக்களுக்கு மணிவாசகப் பெருமானின் நினைவு வரும். தாயகத்திலே திருக்கேதீச்சரமும், காரைநகர் சிவன்கோயிலும் (ஈழத்துச் சிதம்பரம்) மணிவாசகர் விழாக்களுக்குப் பெயர் பெற்றவை.

எல்லாம் வல்ல நடராசப் பெருமான் தில்லையிலே தமது நடனத்தை முதன்முதலாகப் பதஞ்சலிக்கும் வியாக்கிரபாதருக்கும் ஆடிக்காட்டியது மார்கழித் திங்களில் வரும் திருவாதிரை நாளிலேயே என்பது நம்பிக்கை. அதனால் சிவபெருமானை ஆதிரையான் என்றும் அடியார்கள் அழைக்கலாயினர். ஆதிரைக்கு ஆருத்திரா என்றும் பெயர். சைவர்கள் தில்லைக்குச் சென்று "ஆருத்திரா தரிசனம்" செய்வதைத் தவப்பயனாகக் கருதுவர்.

திருவண்ணாமலையிலும் திருவாதிரை விழாவும் மணிவாசகர் விழாவும் சிறப்பாக நடைபெறும் திருவண்ணா மலையில் மணிவாசகர் திருவெம்பாவையைப் பாடியருளியதும் மார்கழியிலேயாகும். அதனாலும் திருவாசகத்தின் பொருள் சிவபெருமான் ஆதலாலும் மார்கழியில் திருவாசகம் பெரிதும் பேசப்படுகின்றது; மணிவாசகருக்கு விழா எடுக்கப்படுகின்றது.

மக்கள் மத்தியில் அன்புப் பயிரை வளர்த்தெடுப்பதற்குத் திருவாசகத்திலும் சிறந்த பசளை வேறொன்றில்லை.

இதனை நன்குணர்ந்த கனடா சைவசித்தாந்த மன்றத்தினர் ஆண்டுதோறும் திருவாசகவிழாவைச் சிறப்புற நடத்தி வருகின்றனர். இளஞ் சந்ததி சிறப்புற, கனடாவிற் சைவம் சிறப்புற, அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரது வாழ்வும் சிறப்புற வேண்டும் என்னும் சீரிய நோக்குடன் விழா நடத்தப்படுவதை நான் நன்கு அறிவேன்.

தலைவர் அதிபர் தி. விசுவலிங்கம் அவர்களது நோக்கம் உயர்ந்தது. அவரது துணவியார் ஆசிரியை திருமதி வ. விசுவலிங்கம் அவர்களின் உழைப்பு உயர்ந்தது. மன்றத்தின் ஏனைய உறுப்பினர்கள் உயர்ந்தவர்கள். இவர்கள் யாவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்து, திருவாசக விழா இனிதே நடைபெற ஆதிரையான் திருவடிகளை வணங்கி வாழ்த்துகின்றேன்.

வான் கலந்த மாணிக்கவாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலநந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்தும் உவட்டாமல் இனிப்பதுவே.

– வள்ளலார்

-----

ஒரு மொழிக்கு மிக்க சிறப்பைத் தருவன இறை இலக்கியங்களாகிய அருள் திருப்பாடல்களே. தமிழ் மொழியிற் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் பண்டே இருந்தன. எனினும் இறையருளை நிரம்பப் பெற்று இறைவனேயான பெரியார் ஒருவராலோ பலராலோ பலபடப் பாடப்பட்ட பாடற் பெருந்தொகுதி பண்டு இல்லை. இக்குறையை நிரப்பியவர் அறிவாற் சிவனேயானவர் எனப் போற்றிப் புகழப்படும் திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசகர்.

– சி. அருணை வடிவேல் முதலியார்.

தேனூறும் வாசகங்கள் அறுநூறுந் திருக்கோவை
நானூறும் அமுதூற மொழிந்தருளு நாயகனை
வானூறுங் கங்கை நிகர் மாணிக்க வாசகனை
யானூறு பாடாதவகை யிருபோது மிறைஞ்சிடுவேன்

– நாவலர் மூன்றாம் பாலபாடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்



## கலாநிதி நா. சுப்பிரமணியன்

அவர்களின்

## அன்புநெறி – திருவாதிரை மலர்

# வாழ்த்துரை

சமயம் என்பது நம்பிக்கை சார்ந்த ஒரு வாழ்வியல் முறைமையாகும். சமய வாழ்க்கையின் அடிநிலை அம்சங்களாகக் கொள்ளப்படுவன அறமும் ஒழுக்கமுமாகும். அறம் என்பது ஒருவர் பிறரிடம் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடாக அமையும் செயல்களாகும். ஒழுக்கம் என்பது அவர் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் விதித்துக் கொள்ளும் கட்டுப்பாடுகளைக் குறிப்பது. இதனை நடத்தை என்றும் சுட்டுவர். மேற்படி அறம், ஒழுக்கம் ஆகிய இரண்டிலும் அடிப்படையாக அமையும் அம்சம் அன்பு ஆகும். ஒன்று தன்னைத்தான் பாதுகாத்துக் கொள்ளும் அன்புநிலை (ஒழுக்கம்). மற்றது பிறர்மீது புலப்படுத்தும் அன்புநிலை (அறம்). இந்த இருவகை அன்பு நிலைகளையும் உள்ளடக்கியதாக உருவான இந்திய தத்துவஞானப் பிரிவுகளில் ஒன்றே சைவசித்தாந்தம்.

இத்தத்துவம் இறைவன் உயிர்கள்மீது கொண்டுள்ள பெருங்கருணையாகிய அன்பைப் பேசுகின்றது; உயிர்கள் சக உயிர்கள்மீது புலப்படுத்த வேண்டிய அன்பையும் உணர்த்துகின்றது. இவற்றுடன் உயிர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கநெறிகளையும் இறைவன்மேல் புலப்படுத்த வேண்டிய அன்பாகிய பக்தியையும் அது பேசுகின்றது. இந்த நால்வகை அன்பு நிலைகளையும் தர்க்கரீதியான விளக்கங்களுடன் தத்துவ நிலைப்படுத்திப் பேசும் முறைமைகள் ஊடாக உருவாகி வளர்ந்ததே சைவசித்தாந்தம் என்பதை வரலாறு உணர்த்துகின்றது. எனவே சைவசித்தாந்தத்தை "அன்புநெறி" எனச் சுட்டுவது சாலப் பொருத்தமானது என்பதே எனது கணிப்பாகும். இத்தத்துவ நெறி சார்ந்து வெளி வரும் உங்களது இதழுக்கு "**அன்புநெறி**" எனத் தாங்கள் பெயரிட்டுள்ளமையின் பொருத்தப்பாட்டை உணர்ந்து மனநிறைவடைகின்றேன்.

சைவசித்தாந்தம் தமிழகத்திலே உருவான தத்துவம். ஆயினும் அதனை விரிவுரை செய்து வளர்த்தெடுப்பதில் ஈழத்தவர் ஆற்றியுள்ள பங்களிப்பு விதந்துரைக்கத்தக்க சிறப்புடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி ஞானப்பிரகாச சுவாமிகள் (16–17ஆம் நூற்றாண்டுகள்) முதல் (ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், காசிவாசி செந்திநாதையர், மேலைப் புலோலி நா. கதிரைவேற்பிள்ளை, சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார், இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை முதலானோரை உள்ளடக்கியதாக) நமது தலைமுறையில் வாழ்ந்து மறைந்த இலக்கிய கலாநிதி பண்டிதமணி மகாவித்துவான் மு. கந்தையா வரை சைவசித்தாந்தத்தை வளம்படுத்தியவர்களின் வரலாறு விரித்துப் பேசப்படவேண்டிய அளவு விடயப் பரப்பு உடையதாகும். இவர்களால் அத்தத்துவம் அடைந்துள்ள புதிய வகை விளக்கங்களும் பல ஆய்வேடுகள் எழுதப்படக்கூடிய அளவு பொருட் பரப்புடையவையாகும்.

இவ்வாறு ஈழத்தவர்களால் வளம்படுத்தப்பட்ட சைவசித்தாந்தத் தத்துவம் அண்மைக்காலப் புலம்பெயர் சூழலில் புதியதொரு பரிணாமத்தை எதிர்பார்த்து நிற்கின்றது. கனடா முதல் அவுஸ்திரேலியா வரையான நாடுகளில் புலம்பெயர்ந்துறையும் தமிழ் மக்களின் இன்றைய தலைமுறையினரின் இதயங்களுக்கு இத்தத்துவம் உரியவாறு சென்று சேரவேண்டும். சமகாலப் புறவுலகத் தாக்கங்களுக்கு ஈடுகொடுக்கத் தக்க வகையில் சைவசித்தாந்த மெய்ப்பொருள் அவர்கள் உள்ளத்தில் வேரூன்றி முளை கொள்ள வேண்டும். அதற்கேற்ப அத்தத்துவம் வாழ்வியல் விளக்கம் பெறவேண்டும். இதுவே புலம்பெயர் சூழலில் சைவசித்தாந்தம் எதிர்பார்த்து நிற்கும் பரிணாமம் ஆகும்.

மேற்படி புதிய பரிணாமத்தின் தேவையை நீங்கள் உரியவாறு உணர்ந்து செயற்பட்டு வருகின்றீர்கள் என்பது எனது கணிப்பாகும். குறிப்பாக, இளந்தலைமுறையினர் உள்ளத்தில் சைவசித்தாந்தம் முளைகொள்வதற்கான அவசியம் இருப்பதை உணர்ந்து அதற்கேற்றவாறு இறை நம்பிக்கையையும் பக்தி உணர்வையும் ஏற்படுத்தவல்ல புராணக்கதைகள், கட்டுரைகள், செய்திகள், உரைவிளக்கங்கள் முதலியவற்றை ஒவ்வோர் இதழிலும் தாங்கள் பதிவு செய்து வருகிறீர்கள். "அன்புநெறி" இதழ்களை ஒருசேர வைத்து நோக்கும்போது மேற்படி விடயங்களைத் தொகுத்துப் பதிவு செய்வதில் ஒரு திட்டப்பாங்கான அணுகுமுறை இருப்பதை என்னால் கண்டுணர முடிந்தது. குறிப்பாகச் "சமயகுரவர், சந்தானகுரவர்" வரலாறுகள், இதிகாச புராணக் கதைகள், முப்பொருள் உண்மை விளக்கங்கள், தேவார திருவாசகப் பாசுரங்களின் நுண்பொருள் விளக்கங்கள், சமகாலச் சைவசமூகத்துக்கான தேவைகள் பற்றிய குறிப்புக்கள், சைவச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறார்களின் பக்தி உணர்வு சார்ந்த அரங்க-நாடக நிகழ்வுகளின் பதிவுகள் என்பனவாக பலமுனைப்பட்ட விடயங்களையும் நீங்கள் "அன்புநெறி"யின் விடயப் பரப்புக்குள் கொண்டு வந்துள்ளீர்கள்.

இவ்வாறான பொதுநிலைச் செயற்பாட்டுக்கு மேலாக அவ்வப்போது சைவம் சார்ந்த சிறப்புநிலை வெளியீடுகளை - "**அன்புநெறிச் சிறப்பு மலர்**"களையும் தயாரித்துள்ளீர்கள். **திருவருட்செல்வர் விழா மலர், திருவாதிரை மலர்** மற்றும் **சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி நினைவு மலர்** (2002), தவத்திரு சிவயோக சுவாமிகள் குருபூசை சற்குரு போதிநாத வேலன் சுவாமி வரவேற்பு மலர் (2003) முதலியனவாகத் தாங்கள் தயாரித்துள்ள மலர்கள் சைவத்தின் சமகால இருப்பு தொடர்பான வரலாற்றுப் பதிவுகள் எனக் கொள்ளத் தக்கவை. மேலும் தாங்கள் சார்ந்துள்ள கனடா சைவசித்தாந்த மன்றத்தின் சார்பில் தயாரித்துள்ள வைத்தீசுவரர் மலர் (2001) என்ற ஆக்கமும் முக்கிய வரலாற்றுப் பதிவாகும்.

இவ்வாறாக **அன்புநெறி** இதழூடாகவும் அதற்கு ஆதார நிறுவனமாக அமைந்துள்ள கனடா சைவசித்தாந்த மன்றத்தின் ஊடாகவும் தாங்கள் கடந்த பல ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் எழுத்தாக்கப் பணிகள் புலம்பெயர் சூழலின் சைவ வரலாற்றிலும் பொதுவான ஈழத்துச் சைவமரபிலும் கவனத்தையும் கணிப்பையும் பெறவேண்டிய ஆவணங்களாக அமைகின்றன.

சைவசித்தாந்த மன்றத்தின் மூலம் தாங்கள் இளம் தளிர்களுக்கு சமயபோதம் வழங்கி வருகின்றீர்கள். அத்துடன் ஈழத்தில் உள்ள அநாதைச் சிறார்களுக்கு நிதி திரட்டி வழங்குதல் முதலான அறப்பணிகளையும் செய்து வருகின்றீர்கள். தாயகத்திலிருந்து வரும் அறிஞர் பெருமக்களை வரவேற்று உபசரித்து பண்பாட்டுப் பாலம் அமைக்கின்றீர்கள்.

தங்களின் இவ்வாறான பணிகளின் பண்பையும் பயன்பாட்டையும் நேரில் தரிசிக்கும் வாய்ப்பைப் பெற்றவன் நான். மூன்றாண்டுகட்கு முன்பு தாங்கள், மன்றத்தின் சார்பில் என்னையும் என் துணைவியாரையும் அழைத்துக் கௌரவித்தீர்கள். அப்போது தங்கள் செயற்பாடுகள் "வேருக்கு நீர்வார்க்கும் பணி" என நான் பாராட்டினேன். அந்த இனிய நினைவுகளையும் மனத்தில் இருத்தி, **சைவசித்தாந்த மன்றம் வாழ்க, அதன் ஆன்மீக - சமூகப் பணிகள் தொடர்க! அன்புநெறி வளர்க**! என வாழ்த்தி அமைகின்றேன்.

வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொழும்பு சிவத்திருமன்றத் தலைவர், இலண்டன் மெய்கண்டார் ஆதீனப் புலவர் சித்தாந்தரத்தினம் சிவத்திரு கலாநிதி க. கணேசலிங்கம் அவர்களின்

# வாழ்த்துரை

கனடா சைவசித்தாந்த மன்றம் "அன்புநெறி" என்ற ஆன்மீக இதழை வெளியிட்டுச் சைவ உலகிற்குப் பெரும்பணி ஆற்றுகிறது. இவ்விதழ் ஆண்டுக்கு இருமுறை சிறப்பிதழாகவும் வெளி வருகிறது.

இவற்றில் ஒன்று திருவாதிரை மலராக இன்று வெளி வருகிறது. திருவெம்பாவை நாட்களும் திருவாதிரை நட்சத்திரமும் சைவர்களுக்கு அதி முக்கியத்துவம் வாய்ந்தவை. இவை சைவத்தின் முழுமுதல் கடவுளான சிவனை வழிபட்டு நல்வாழ்வு பெறவும் பிறவிப் பயனை எய்தவும் வழிவகுக்கும் புண்ணிய நாட்கள். சைவர்கள் உலகில் எங்கிருந்தாலும் திருவெம்பாவைக் காலத்தில் திருக்கோயில் சென்று இறைவனை உள்ளன்புடன் வழிபடுவார்கள். சைவப் பெருங்கோயிலான சிதம்பரத்தில் ஆருத்திரா தரிசனம் காணச் சைவ மக்கள் பெருந்திரளாகக் கூடிப் பயனடைவர்.

இன்று வெளி வரும் திருவாதிரை மலர் சைவத் தமிழருக்கு, குறிப்பாகப் புலம் பெயர்ந்த மக்களுக்கு, இவற்றை உணர்த்திச் சிவநெறி காட்டும் இதழாக அமையும். சைவம் வளர்க்கும் சீரிய பணியில் தன்னை ஈடுபடுத்தி உழைக்கும் சிவத்திரு தி. விசுவலிங்கம் அவர்கள் சைவ மக்களின் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள். அன்புநெறி நிர்வாக ஆசிரியரான அவருக்கு அன்பு கலந்த வாழ்த்துக்கள்.

அவர் நீடூழி வாழ்ந்து சிவப்பணி செய்யவும், அவர் சார்ந்த கனடா சைவசித்தாந்த மன்றத்தின் அரிய பணிகள் தொடர்ந்து சிறக்கவும் சிவப்பரம்பொருளை வேண்டி வணங்குகிறேன்.

**மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாதிரையும் திருவெம்பாவையும்

(கவிஞர் சைவப்பெரியார் சிவத்திரு. நா. மகேசன்,
அன்புநெறி சிறப்பாசிரியர், சிட்னி, அவுஸ்திரேலியா)

ஊர்திரை வேலை உலாவும் உயர் மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்திரு சோலைக் கபாலீச் சரம் அமர்ந்தான்
ஆர்திரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய்.

இது திருஞானசம்பந்தர் தேவாரம். மயிலாப்பூர் என்னும் இடத்தில் கோயில் கொண்டுள்ள கபாலீச்சரப் பெருமான் மீது பாடப்பட்டது. இத்தலத்துக்குச் சென்ற பிள்ளைப் பெருமான் அன்று அங்கே ஒரு அற்புதத்தை நிகழ்த்தினார். சிவநேசச் செட்டியார் என்பவரின் மகளாகிய பூம்பாவை என்பாள் அரவு தீண்டி இறக்க, அவள் உடலை எரித்து எலும்பையும் சாம்பரையும் ஒரு குடத்தில் இட்டு வைத்திருந்தார்கள். அந்தக் குடத்தைப் பிள்ளைப் பெருமான் முன்வைத்துச் செய்தி சொன்னபோது, சம்பந்தர் மேற்கண்ட பாடலைக் கொண்ட திருப்பதிகத்தைப் பாடிப் பூம்பாவையை உயிர் பெற்றெழச் செய்தார்.

இத்திருப்பதிகப் பாடல்கள் ஒவ்வொன்றிலும் சம்பந்தப் பெருமான் தமிழர்களிடையே நடைபெற்று வந்த திருவிழாக்களை எடுத்துச் சொல்லி அந்தத் திருவிழாக்களைக் காணாது போனியோ பூம்பாவாய் என்று பாடியிருக்கிறார். இப்பாடல்களைப் பார்க்கும்போது, இறைவா இந்தப்பெண் இளம்வயதிலே அகால மரணம் அடைய வேண்டுமா? அவள் வாழ்ந்து அனுபவித்துப் போகாமல் செய்துவிட்டாயே என்று கேட்பதுபோல் இருக்கின்றது. அக்காலத்திலும் அதற்கு முந்திய காலத்திலும் சைவ மக்களிடையே, கார்த்திகை விளக்கீடு, மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், மாசி மகம், பங்குனி உத்திரம் முதலான தெய்வீக நாட்கள் பெருமளவில் திருவிழாக்களாகக் கொண்டாடப்பட்டு வந்தன என்பதையும், அந்த நாட்களில் மக்கள் பெரும் ஈடுபாடுடன் வாழிபாடுகளைச் செய்தார்கள் என்பதும் இத்திருப்பதிகத்தால் அறியக் கிடக்கின்றது.

மார்கழி மாதத்தில் வருகின்ற திருவாதிரைத் திருவிழாவின் முக்கியத்தை நாம் மேற்கண்ட திருப்பாடலில் இருந்து அறிந்துகொள்ளலாம். சிவபெருமானுக்கு ஆதிரையான் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரும் ஒன்றுண்டு. திருவாதிரை அண்டிய காலத்தில் மார்கழி நீராடல், தைநீராடல் என்கின்ற விழாக்களும் இடம்பெறுவது மரபு. மார்கழி நீராடல் என்பதும் தைநீராடல் என்பதும் இருவேறு நீராடல்கள் என்று எண்ணிவிடக்கூடாது. மிகப் பழங்காலத்தில் மார்கழித் திருவாதிரை நாள் தொடக்கம் தைப்பூசம் வரையிலாக இந்த நீராட்டு நோன்பு தொடர்ந்து நடைபெற்று வந்ததாக நற்றிணை, பரிபாடல் முதலிய நூல்களால் அறியக் கிடக்கிறதென்று கூறிய நவநீதக் கிருஷ்ண பாரதியார் அவர்கள், முற்காலத்து மக்கள் இந்நோன்பின் முடிவு கருதித் தைநீராடல் என்றும், அதற்குப் பிற்பட்ட காலத்தோர் நோன்பின் தெடக்கம் கருதி மார்கழி நீராடல் என்றும் வழங்கி வந்தனர் என்று தமது திருவாசக உரையில் எழுதியுள்ளார்.

தற்காலத்தில் திருவாதிரை சம்பந்தப்பட்ட இந்த நீராடல் நோன்பு, மார்கழி நீராடல் என்றோ அன்றித் தைநீராடல் என்றோ வழங்குவது இல்லை. திருவெம்பாவைத் திருநாள் என்றுதான் பரவலாகச் சாதாரண மக்களால் பேசப்பட்டு வருகிறது. மாணிக்க வாசக சுவாமிகளின் காலத்தின் பின் அவர் அருளிச் செய்த திருவாசகத்தின் திருவெம்பாவைப் பாடல்கள் இருபதும் சைவ மக்களிடையே மிகவும் பிரபல்யமாகிவிட்டன. மார்கழித் திருவாதிரை நாளுக்குப் பத்து நாட்களுக்கு முன்னரே இத்திருவெம்பாவைக் காலம் தொடங்கி விடுகிறது. இப்பத்து நாட்களும் தற்காலச் சைவ மக்கள் அதிகாலையில் எழுந்து, வீட்டிலோ அல்லது கோயில் நீர்நிலைகளிலோ குளித்துத் தோய்ந்து, கோயிலுக்குச் சென்று சிவபெருமானுக்கு இயற்றப்படும் அதிகாலைப் பூசை கண்டு அங்கு பாடப்பெறும் திருவெம்பாவைப் பாடல்களைக் கேட்டு தமது விரதத்தை மேற்கொள்வர். பத்தாம் நாளாகிய திருவாதிரை நாளில் கோயிலில் நடைபெறும் சிவபெருமானுக்குரிய ஆர்த்திரா தரிசனம் கண்டு நோன்பை நிறைவுசெய்வர்.

மணிவாசகப் பெருமான் திருஅண்ணாமலையிலே கண்டதென்று சொல்லப்படுகின்ற மார்கழி நீராடலின் சாயலோ அன்றிப் பழந்தமிழ் மக்களின் தைநீராடல் அல்லது அம்பா ஆடல் போன்றவற்றின் சாயலோ இன்றைய திருவெம்பாவை நோன்பில் மிகமிகக் குறைவாகவே காணப்படுகிறது. ஆனால் மணிவாசகப் பெருமான் என்ன நோக்கத்தோடு திருவெம்பாவைப் பாடல்களைப் பாடினாரோ அந்த நோக்கம் இன்றுவரை சைவ மக்களிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேரூன்றி நிற்கிறது. அவர் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடியதன் நோக்கம் மக்களிடையே இறை பக்தியை வளர்க்க வேண்டும் என்பதே. கன்னிப் பெண்கள் மட்டுமல்ல, சிறியோர், முதியோர் என்ற எந்தப் பேதமும் இல்லாமல் இன்றைய தமிழ் சைவமக்கள் திருவெம்பாவை வழிபாடுகளில் கலந்து கொண்டு இறைவனைத் தேடுகின்ற, இறைபக்தியில் மூழ்குகின்ற முயற்சியில் ஈடுபடுகின்றார்கள்.

இற்றைக்கு ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் நான் சிறுவனாக இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற திருவெம்பாவை நிகழ்வுகளை நினைத்துப் பார்க்கும் போது இந்த வழிபாட்டு நிகழ்ச்சி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்து, பலவித மாற்றங்களை அடைந்து இன்றைய நிலைக்கு வந்து விட்டாலும், அதன் அடிப்படை நோக்கம், மிகுந்த நேரியதாய் இருப்பதற்கு மணிவாசகர் போன்ற அருளாளர்களின் வழிகாட்டலும், அயராத இறைபக்தியுமே காரணமாகும் என்று எண்ணிப் பெருமிதம் அடைய வேண்டியுள்ளது. நான் வாழ்ந்த சூழல் கிறீஸ்தவர்கள் வாழ்ந்த சூழல். சைவக் கோயில்களின் தொகையிலும் பார்க்க கிறீஸ்தவ ஆலயங்களே அதிகரித்துக் கொண்டிருந்த காலம். அக்காலத்திலும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பண்ணாகம், சுழிபுரம், அளவெட்டி, மண்டுமண்டை போன்ற ஊர்களில் வாழ்ந்த சிவனடியார்கள், திருவெம்பாவைக் காலத்தில் தமது ஊரில் உள்ள கோயிலில் இருந்து தொடங்கிக் கால்நடையாக திருவெம்பாவைப் பாடல்களை ஓதிக்கொண்டு, ஒவ்வொருவரும் திக்குத்திக்காகச் சென்று அதிகாலைவரை சங்க நாதம் முழக்கி மக்களைத் துயில் எழுப்பிய நிகழ்வும், அவர்களின் பாட்டொலியும் இன்றும் என் உள்ளத்தில் பசுமரத்தாணிபோற் பதிந்திருக்கிறது. ஒழுங்கைகள் ஊடே பாடிவரும்போது, ஊர்நாய்கள் குரைத்து அவர்களுக்குச் செய்யும் அச்சுறுத்தல்களையோ, அல்லது இது இன்ன குறிச்சி, இங்கு நாம் செல்லக்கூடாது என்ற அச்சமோ, பேதமோ இல்லாமல் அச்சிவனடியார்கள் செய்துவந்த சேவையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அக்காலத்து மக்கள் அவர்களைப் பாராட்டினார்கள், அவர்களை மதித்தார்கள். கமக்காரர்கள் எல்லாம் தை, மாசி மாதங்களில் தாம் நெல்லு வெட்டிப் பொலி அடிக்கின்ற போது, திருவெம்பாவைத் தொண்டு செய்த தொண்டருக்குப் பங்கு கொடுக்கத் தவறுவதே இல்லை. இக்காலத்தில் இத்தகைய பண்புமிக்க வழக்கம் தொடர்கிறதோ என்பது எனக்குத் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்சொன்ன காலத்தின் பின்னர் நான் கொழும்பில் வாழ்ந்தபோது, வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை போன்ற இடங்களிலே திருவெம்பாவைக் காலத்தில் சில சிவபக்தர்கள் கூட்டுவழிபாட்டுப் பாடல்களையும், திருவெம்பாவைப் பாடல்களையும் பாடிக்கொண்டு சில வீதிகளின் வழியே சென்று கோயிலை அடைந்து அதிகாலைப் பூசை கண்டு சென்ற நிகழ்வுகளையும் பார்த்திருக்கிறேன். இந்த அனுபவங்களுக்கும், இறை நாட்டத்துக்கும் விரிந்த தளம் அமைத்துத் தந்த மணிவாசகப் பெருமானின் கருணையும், அன்பும் தமிழ்ச் சைவ மக்களின் இதயங்களை உருக்குவதாகும். புலம்பெயர்ந்து வாழும் எல்லாச் சைவமக்களுக்கும் திருவெம்பாவை வழிபாடுகளில் பங்கு கொள்ள வாய்ப்பு இருக்கும் என்று சொல்லிவிட முடியாது. இருப்பினும் இவ்வழிபாட்டின் தொன்மையும், பக்தியின் தன்மையும் உணர்ந்து, வீடுகளிலாயினும் இக்காலத்தில் திருவெம்பாவைப் பாடல்களை ஓதி இறை நாட்டத்தைப் பெருக்க வேண்டியது சைவப்பெருமக்களின் கடமையாகும். தற்போது நான் வாழ்கின்ற சிட்னியிலே வைகாசிக் குன்றிலே (Mays Hill) அமைந்துள்ள சிட்னி முருகன் கோயிலில் திருவெம்பாவை வழிபாடுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. நகர்ப்புறத்தில் உள்ள சைவ மக்கள் திருவெம்பாவைக் காலத்தில் அதிகாலையில் குளித்துக் கோயிலுக்குச் சென்று அங்கு பூசை கண்டும், திருவெம்பாவைப் பாடல்களை ஓதக்கேட்டும் இறைபக்தியில் மூழ்கி இன்பம் பெற்றபின் தத்தம் கடமைகளுக்குச் செல்வது ஆண்டுதோறும் நடக்கும் வழக்கமாகிவிட்டது. கோயிலுக்குச் செல்ல வாய்ப்பில்லாதவர்கள் கேட்டுப் பயனடையும் பொருட்டு உள்ளூர் வானொலிகள் திருவெம்பாவை நிகழ்ச்சிகளை நேரடி அஞ்சல் செய்வதும் பெருந் தொண்டாக அமைந்து விட்டது.

பழந்தமிழ் வழிபாடுகளில் ஒன்றான தைநீராடல், மார்கழி நீராடலாகி மணிவாசகப் பெருமானின் வழிகாட்டலிற் திருவெம்பாவை நோன்பாகிச் சிறு சிறு மாற்றங்களை எய்தினாலும் இன்றுவரை அந்த வழிபாட்டின் அடிப்படை மாறாது மக்கள் மனத்தில் நிலைத்திருப்பது சைவ சமயத்தின் பக்தி மார்க்கத்தின் நிலையான தன்மையே ஆகும்.

-----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றச் செய்திகள்

## சேர் பொன். இராமநாதன் நினைவு தினம்

கனடா சைவ சித்தாந்த மன்றம் நவம்பர் 25 செவ்வாய்க்கிழமை மிசிசாகா யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் மேற்படி தினத்தைக் கொண்டாடியது. சிறப்புச் சொற்பொழிவாளர்களாக பேராசிரியர் அ. சண்முகதாஸ், திருமதி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். மாலை 5:00 மணிக்கு சைவசமய முறைப்படி தம்பதிகள் வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து கூட்டு வழிபாடும் பூசையும் இடம் பெற்றது. மன்றத் தலைவர் திரு. தி. விசுவலிங்கம், அவர்களை வரவேற்று உரை நிகழ்த்தினார். அதை அடுத்து கவிஞர் கலாநிதி வி. கந்தவனம் அவர்கள் அறிமுக உரை நிகழ்த்தினார். அவர் தனது அறிமுக உரையில் பேராசிரியர் அவர்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் தனது கல்வியைத் திறம்படக் கற்று உயர்ந்தவர் என்பதை எடுத்துக் கூறினார். தொடர்ந்து மன்ற மாணவர்கள் சேர் பொன் இராமநாதன் பற்றிப் பாடல்கள் பாடிப் பேச்சும் பேசினார்கள். பின்னர் பேராசிரியர் அவர்கள் தவத்திரு ஆறுமுகநாவலர் தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்தவர் என்பதைச் சுட்டிக்காட்டி நாவலரைத் தொடர்ந்து சேர் பொன் இராமநாதன் செய்த அரும்பணிகள் பற்றியும் கூறினார். மேலும் திருமுறைகள் பற்றி கூறுகையில் சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்தை அடிப்படையாகக் கொண்டு தேவாரங்களைப் பண்ணோடு பாடும் முறைமையையும் வெவ்வேறுபட்ட முறைகளில் பாடுகின்ற முறைகளுக்கும் ஆதாரம் காட்டி அரியதொரு சொற்பொழிவினை ஆற்றினார். அடுத்து திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் தாங்கள் இருவரும் பொறுப்பாக நடத்தும் சைவச் சிறுவர் இல்லம் பற்றி கூறினார். அத்தோடு இங்குள்ள பிள்ளைகளைப் பார்க்கும் பொழுது தங்கள் சிறுவர் இல்லப் பிள்ளைகளின் ஞாபகம் வருகிறதென்றும் பிள்ளைகள் இயல்பாகவே கருமம் ஆற்றுபவர்கள் என்றும் கூறினார். பின்னர் சிறுவர் இல்லத்தின் தேவைகள் பற்றியும், பேராசிரியரும் அவர் பாரியாரும் இல்லத்திற்கு ஆற்றும் பணிகள் பற்றியும் தலைவர் எடுத்துக் கூறினார். அதன்பின் இல்லத்திற்கு உதவும் முகமாக கூட்டத்தில் இருந்த அன்பர்கள் தங்களால் இயன்ற தொகையினை அளித்து உதவினார்கள். பின்னர் இறுதிப்பூசை நடைபெற்று பிரசாதம் வழங்கலுடன் நிகழ்ச்சிகள் இனிதே நிறைவு பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநெறி என்னும் பெருநெறி

(சித்தாந்தரத்தினம், கலாநிதி க. கணேசலிங்கம், கொழும்பு சிவத்திருமன்றத் தலைவர், இலண்டன் மெய்கண்டார் ஆதீனப் புலவர்)

இறையருள் பெற்ற ஞானிகள் பலரும் குருவருள் பற்றிப் பேசுவதைக் காணலாம். விநாயகப் பெருமான் "குரு வடிவாகி வந்து குவலயந் தன்னில் திருவடி வைத்த திறத்தினை" ஔவையார் பாடுகிறார். அருள் கொடுத்து ஆட்கொண்ட பின்னரும் "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்று அருணகிரிநாதர் முருகனை வேண்டுகின்றார்.

## குரு தரும் தெளிவு

மாணிக்கவாசக சுவாமிகள் தனது திருவாசகத்தில் இறைவன் குருவாக வந்து அருளிய பாங்கை பலப்பட விதந்து கூறி உருகுகிறார். குருவின் வரவால் அவருக்கு மெஞ்ஞானத் தெளிவு உண்டாகிறது. "குருநெறி" என்பது சைவசமயத்தில் பெருநெறியாக உள்ளது. குருவின் உபதேசம் பெற்றே மெஞ்ஞானம் கிட்டும் என்பதையும் குருவருள் மூலமே இறையருள் கைகூடும் என்பதையும் அருளாளரின் வாக்காலும் அனுபவத்தாலும் அறிய முடிகிறது.

குருவாக வருபவர் தனது சீடனின் குற்றத்தைப் போக்கி, அவரை நெறிப்படுத்துவார். "கு" என்ற எழுத்து குற்றம் என்பதையும் "ரு" என்ற எழுத்து நீக்குதல் என்பதையும் குறிக்கும் என்பர். ஆசிரியர் என்ற சொல்லும் இப்பொருளில் அமைந்ததே. ஆசு–குற்றம், சிரியர்– நீக்குபவர்.

ஒருவரின் ஆன்மீக வளர்ச்சிப் பாதையில் குருவின் வருகை ஒரு திருப்பு முனையாக அமைகிறது. வாழ்வியல் இன்னல்களில் சிக்குண்டு வழி தெரியாமல் கலங்கும்போது சிலநேரம் ஒரு நல்ல மனிதரின் வருகையும் வார்த்தையும் இன்னல்களையும் மருந்தாக இருப்பதுண்டு. மனத் தெளிவு தந்து வாழ்வின் திருப்புமுனை அந்த அனுபவம் ஏற்படுகிறது. இது போன்றே குருவின் ஆளுமையும் அறிவுரையும் ஆன்மீக வாழ்வில் ஒரு திருப்பு முனையை உண்டாக்கி, தெளிவு கொடுத்து நெறிப்படுத்துகின்றன. குருவைப் பற்றிய சிந்தனையும் பேச்சும் கூட எதனையும் தெளிவாகப் பார்க்கும் மனப்பக்குவத்தை உண்டாக்குகின்றன. மெஞ்ஞான வழியில் தெளிவுடன் முன்னேற வழிவகுக்கின்றன. திருமந்திரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் பின்வரும் பாடல் ஆன்மீக அனுபவ மொழியாக அமைந்துள்ளது.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே!

## குருவார்த்தை

குருவின் திருவார்த்தை சீடர்கள் அனைவருக்கும் ஒன்றாக இருப்பதில்லை. அவரவர் பக்குவத்திற்கு ஏற்ப வேறுபடும். அருணகிரி நாதருக்கு "சும்மாயிரு" என்ற வார்த்தையை முருகப் பெருமான் அருளுகிறான். வாழ்வில் பல துன்பங்களை அனுபவித்து அலைவுற்ற அவர் மனத்திற்கு இது ஆறுதல் அளித்து அமைதி கூட்டுகிறது. அவரின் எண்ண அலைகள் ஓய்கின்றன. உலக இன்பங்களே பொருளென்றிருந்த அவருக்கு அவை பொருளல்ல என்ற உண்மை புலப்படுகின்றது. இதனை அவரின் கந்தரனுபூதியில் இருந்து அறிய முடிகிறது.

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இருசொல்அற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே.

இறைவனே குருமூலமாக அருள் புரிகிறான். உபதேசம் செய்கிறான். மெஞ்ஞானக் குருவின் வார்த்தை இறை வார்த்தையே. ஞானசம்பந்தப் பெருமானின் சொற்கள் குருமொழியாக அமைந்தவை. பக்தியுடன் அவரின் பதிகங்களைப் படிப்பவருக்கு உலகியல் நலமும் இறையருளும் கிட்டுவது இயல்பு. அவரின் திருப்பதிகங்கள் போல் திருமுறைகள் அனைத்திற்கும் இத்தகைய ஆற்றல் உண்டு. நோய் தீரவும், இடர் நீங்கவும், வினையகலவும் அவை துணை புரிவதை வரலாற்றிலிருந்து அறியலாம். இன்றும் திருமுறைகளைப் பாராயணம் செய்து பயனடைவர் பலருளர். இதற்குக் காரணம் இறைவன் உள்ளிருந்து உணர்த்த அருளாளர் மூலம் வெளிவந்த திருவார்த்தைகள் அவை. அவனுரை தனதுரையாக வந்ததென சம்பந்தப் பெருமான் கூறுகிறார்.

## குருவாகிய பரமன்

குருமூலமாயன்றி இறைவன் தானே குருவாக வந்து அருள் புரிந்த நிகழ்ச்சிகளையும் அருளாளர் வாழ்வில் காண முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் தட்சணா மூர்த்தி வடிவில் குருவாக உபதேசம் செய்துள்ளார். தமிழகம் கண்ட திருவடிவம் தட்சணாமூர்த்தி என்னும் தென்முகக் கடவுள்.

மாணிக்கவாசக சுவாமிகள் வாழ்வில் இத்தகைய பல நிகழ்ச்சிகள் நடை பெற்றதை அவரின் திருவாசகம் மூலம் அறியலாம். அவற்றை நினைந்து நினைந்து அவர் நெஞ்சம் உருகுகிறார்.

"அருபரதத்தொருவன் அவனியில் வந்து
குருபரனாகி அருளிய பெருமையை......."

"ஈறி லாதநீ எளியை யாகிவந்
தொளிசெய் மானிட மாக நோக்கியும்"

"பூவ லந்தனிற் பொலிந்திருந் தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசும்"

குருபரனாகி வந்தருளிய பரமன் தன் பாவத்தை நாசம் செய்ததாக மாணிக்கவாசகர் கூறுகிறார். நாம் செய்த வினையின் பலனை நாமே அனுபவித்துத் தீர்க்க வேண்டும். இது சமயங்கள் பலவும் நம்பும் வினைக்கொள்கை. "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்ற சங்க இலக்கியத் தொடர் தமிழரின் தத்துவச் சிந்தனைகளில் ஒன்று.

ஒரு பிறவியில் செய்த நல்வினை தீவினைகளின் பலன் புண்ணிய பாவப் பதிவுகளாக எம்மைத் தொடர்ந்து அடுத்த பிறவிக்கு வருகிறது. இதனை மாணிக்கவாசகர் "அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி" என்று கூறி விளக்குகிறார். (அறம் - புண்ணியம்). இவ்வினைப்பலன்கள் இன்பதுன்ப அனுபவமாகி வந்து தீர்ந்து போகின்றன. இவ்வனுபவங்களால் எமது அறிவு விருத்தியடைகிறது. அறிவு விருத்தி அடையும்போது எம்மைப் பிணித்த ஆணவத்தின் பிடி தளர்கிறது. எமக்குள்ள குறைகளுக்கு மூல காரணம் ஆணவம். அறியாமை எமது அடிப்படைக் குறை. அறியாமையே ஆணவம் எனக் கூறப்படுவதும் உண்டு. பிறவிகள் தோறும் வினை செய்து, அனுபவம் பெற்று அறிவு வளரும் போது ஆணவத்தின் பிடி சிறிது சிறிதாக விலகி இறுதியில் நீங்குகிறது. இந்த ஆணவ நீக்கம் சித்தாந்த உலகில் "மலபரிபாகம்" எனப்படுகிறது. ஆணவப்பிடி தளர்ந்த நிலையில் நல்வினை தீவினைப் பயனாக வரும் இன்ப துன்ப அனுபவங்களைச் சமமாக நோக்கும் பக்குவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை உயிருக்கு உண்டாகிறது. உயிரின் இந்த நிலை "இருவினை ஒப்பு" எனப்படுகிறது. மலபரிபாகமும் இருவினை ஒப்பும் வந்தபொழுது இறையருள் பெறுவதற்கு ஏற்ற பாத்திரமாக உயிர் திகழ்கிறது. இந்நிலையில் இறையருள் தானாகவே உயிரை ஆட்கொள்கிறது. இதனைச் சத்திநிபாதம் என்பர். சத்தி – இறையருள், நிபாதம் – வீழ்ச்சி. இந்தப் படிமுறை வளர்ச்சியில் இறைவனே குருமூலமோ, குருவாக வந்தோ உயிரின் வினைப்பலன்களை நீக்குகிறார். மாணிக்கவாசகர் தனக்கு இறைவன் பூதலத்தில் வந்து பாவநாசம் செய்ததாகக் கூறுகிறார். "பாவநாசம்" என்பது வினைப்பயன் நீங்கிய நிலை. இந்நிலையில் ஆணவ மலம் அகல்கிறது. மலபரிபாகம் கூடுகிறது. இவை நிகழ்வதற்கு குருவருளும் இறையருளும் துணை புரிகின்றன.

## சைவனாகிய சிவன்

மாணிக்கவாசகருக்குக் குருவாக வந்த சிவபெருமான் பற்பல வேடங்களில் தோன்றி அருள் புரிகிறார். திருவாசகத்தில் இவை பற்றிய குறிப்புகள் பல உள்ளன. சிவபரம்பொருள் திருவையாற்றிலே சைவனாகக் காட்சி அளித்ததைக் கூறுகிறார். சைவர் என்றும் சிவனைப் போற்றுகிறார்.

"ஐயா றதனிற் சைவ னாகியும்"
"சைவா போற்றி தலைவா போற்றி"

எல்லா நலங்களும் நிறைந்த செம்பொருள் சிவம் "செம்பொருட்டுணிவே சிவபெருமானே" என்று திருவாசகம் கூறுகிறது. அன்பாகவும் அறிவாகவும் சிவனைக் கண்டு போற்றியவர்கள் சைவ ஞானிகள். சைவம் சிவனுடன் சம்பந்தமானது என்று திருமந்திரம் கூறுகிறது. சைவன் என்பவன் சிவபரம்பொருளின் தன்மைக்கும், பெருமைக்கும், சிறப்புக்கும் உரியவனாகத் தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டும். ஒரு சைவன் எப்படி இருக்க வேண்டும் என்பதை அப்பரடிகள் உணர்த்துகிறார்.

"சிவனே எமக்கு முழுமுதற் கடவுள். எந்தத் தெய்வத்திற்கும் ஈடிணையில்லாத் தலைவர் சிவபெருமான். தாமார்க்கும் குடியல்லாத் தன்மை கொண்ட அவனை வழிபடும் சைவர்கள் நாங்கள். நாம் யார்க்கும் குடியல்லோம். அதனால் தலை நிமிர்ந்து நாம் வாழ வேண்டும். நரகத்திற்குச் செல்லும் வழியில் சென்று இடர்ப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டோம். நோய் பிணிக்கு ஆளாக மாட்டோம். எமக்கு எந்நாளும் இன்பமே, துன்பமில்லை." இவ்வாறு ஒரு சைவனுக்குரிய தகைமைகளை அப்பரடிகள் "நாமார்க்கும் குடியல்லோம்" என்ற தேவாரத்தில் விளக்குகிறார். சிவபெருமான் சைவனாகக் காட்சியளித்து இதனை உணர்த்துவதாக மாணிக்கவாசகர் கூறுவது சிந்தனைக்குரியது.

சிவனின் இந்தக் காட்சி ஒளி செய் மானிடனாக வந்த வடிவம். தாவில் சாராசரங்கள் எல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார் என்று சம்பந்தப் பெருமானைச் சேக்கிழார் வர்ணிப்பது இதனை நினைவு கூர வைப்பதாக உள்ளது. சைவன் என்பவன் சிவம் பெருக்கும் சீரிய நெறியைக் கொண்டவன். அவன் குருவருளாலும் இறையருளாலும் இறுதியில் சிவமாம் தன்மை பெறுகிறான். இறைவன் தன் மலத்தை அறுத்து சிவமாகத் தன்னை ஆக்கி ஆட்கொண்டதை மணிவாசகர் உரைக்கிறார்.

"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்ககி எனையாண்ட
அத்தனெனனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே"

சிவமாதல் வேறு. சிவமாயிருத்தல் வேறு. எந்த நிலையிலும் ஆன்மா சிவமாயிருத்தல் இல்லை. முத்தியில் கூட சிவம் வேறு, உயிர் வேறு. அங்கே சிவமாம் தன்மை பெற்று இருக்கும்.

**மந்திரோபதேசம்**

குருவாக வருபவர் சீடனின் குற்றங்களைக் களைந்து மந்திரோபதேசம் செய்து இறைவழியில் செலுத்துவார். திருவடி வைத்து ஈடேற்றியதாக அருளாளர் கூறுவதுண்டு. இறைவனின் திருவடி அருளைக் குறிப்பது. விநாயகப் பெருமான் குருவாக வந்து திருவைந்தெழுத்தை (பஞ்சாட்சரத்தை) தெளிவாய் உணர்த்தித் திருவடி தந்ததாக ஔவையார் தனது விநாயகர் அகவலிலே கூறுகிறார்.

திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென......

மந்திரங்களில் உயர்ந்தது திருவைந்தெழுத்து மந்திரம். "நமசிவய" என்பது தூலபஞ்சாட்சரம். "சிவயநம" என்பது சூக்கும பஞ்சாட்சரம் (இவை உச்சரிக்கப்படும் போது நமச்சிவாய, சிவாயநம என்று அமையும்) சூக்கும பஞ்சாட்சரம் தூல பஞ்சாட்சத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட உயர்ந்தது. மந்திரவேந்து என்று போற்றப்படுவது இது. "திருந்திய முதலைந்து எழுத்து" என்று ஔவையார் குறிப்பிடுவது இதனையே. இறைவனே குருவாக வந்து இதனை ஔவையாருக்கு உபதேசித்துள்ளார்.

ஔவையார் காட்டும் இந்த அருளனுபவ நிலையை மாணிக்கவாசகரும் கூறுகிறார். எத்தகைய தவமும் செய்யாமல், இந்தத் தகுதியைச் சிவபெருமானே அளித்துவிட்டார் என்று கூறி உருகுகிறார்.

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந்து எனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே"

## சிவனருளே குருவருள்

குருவருள் பெறுவதற்கு நாம் தவம் செய்திருக்க வேண்டும். முன் செய்த தவங்களால் அருளாளர்கள் குருவருள் பெற்று இறைவனடி சேர்ந்தார்கள். நாம் செய்யக் கூடிய தவங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என சைவசமயம் விளக்கும்

ஐம்புலன்களின் வழி சென்று உழல்வது மனித இயல்பு. ஒரு அரச குமரன் தன் உண்மை இயல்பை அறியாமல், வேடர் குலத்தில் வேடுவனாக வளர்கிறான். தக்க பருவத்தில் ஒருவர் வந்து "நீ அரச குடும்பத்தவன் நீ இருக்க வேண்டிய இடம் வேட்டுவ குலம் அல்ல, அரச குடும்பம்" என்று உணர்த்த, அவன் தான் வளர்ந்த வேட்டுவ குலத்தை விட்டு நீங்கி அரச குடும்பம் சென்று சேர்கிறான். இது போன்றே இறைவனுடன் இருக்கவேண்டிய ஆன்மா ஐம்புலன்கள் என்ற வேடர் கூட்டத்தில் சேர்ந்து உழல்கிறது. முன் செய் தவத்தால், உரிய காலத்தில் குரு வந்து நீ "சிவநிலையில் இருக்க வேண்டியதே உனது உண்மை இயல்பு" என்று உணர்த்த, அந்த ஆன்மா தனது சூழலை விடுத்து இறையைச் சார்கிறது. இவ்வாறு சிவஞான போதம் என்ற சிதத்தாந்த நூல் விளக்குகிறது.

இங்ஙனம் குருவாக வந்து உணர்த்துபவர் எமக்கு முதற் பொருளாகிய சிவ பரம் பொருளே. "தம்முதல்" என்று சிவஞான போதம் இதனைக் கூறுகிறது. "போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே" என்று மாணிக்கவாசகர் போற்றுகிறார். சிவனருளே குருவாக வந்தோ, குருவின் மூலமாகவோ எம்மை ஆட்கொண்டு ஈடேற்றுகிறது.

-----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவை நோன்பு

(திருமதி சகிதேவி கந்தையா, கலிபோனியா)

கன்னிப் பருவம் பேதமை நீங்கி தாய்மை காணும் பெதும்பைப் பருவத்தை நோக்கி நிற்கும் இனிமைத் தென்றல் வருடும் வாழ்க்கையின் வசந்தம். இப்பருவத்திற்குரிய முதன்மை நோன்பாக சங்ககாலந் தொட்டுக் கணிக்கப்பட்டு மிக்க பத்தி சிரத்தையாகக் கன்னியரால் நோற்கப்படுவது "பாவை நோன்பு". பலர் இதனை விதந்துரைத்தும் ஆண்டாள் சீமாட்டியும், மாணிக்கவாசகரும் செவிக்கும் உள்ளத்திற்கும் உவகை தரும் திருப்பாக்களாக இதன் ஆன்மீக உலகியல் சிறப்பைச் சிலாகித்திருப்பது எமக்குப் பேரின்பம் தரும் பெரு நிதிகள்.

இருள் போய் அகல சூரியன் மெல்லெனத் தலைகாட்டும் மார்கழி மாதமாக என்றும் இருக்க விரும்புகிறான் கண்ணன். கன்னியர் உள்ளத்தைத் தன் அலகிலா விளையாட்டால் அலை பாயச் செய்யும் பரந்தாமனையே தன் கணவனாக வரித்து, தன் மலரும் கன்னிப்பருவத்தை அவனுக்கே அர்ப்பணித்து, தினமும் மாலை சூட்டி மகிழும் சூடிக் கொடுத்த நாச்சியார் – ஆண்டாள் திருப்பாவை சுய அனுபவமாய், இதனால் நெஞ்சை உருக்குவதாயும் அமைகிறது. மாணிக்கவாசகரோ குருந்த மர நீழலில் குருவாய் எழுந்தருளிய எம்பிரான் திருநோக்கால் பிறப்பின் பொருளை உணர்ந்து தன் உயர் பதவியைத் துச்சமெனத் தூக்கி எறிந்து விட்டு பக்தி வெள்ளத்தில் தன்னை மூழ்கடித்த நிறைமதியன். "நாட்டவர் நம்தமை ஆர்ப்ப ஆர்ப்ப நாமும் அவர்தமை ஆர்ப்ப ஆர்ப்ப" எனத் தாமரை இலை தண்ணியாய் உலகியலை இரசித்தும் அதனுள் மூழ்காது பத்திமையில் தனித்து நிற்கும் உயர் நிலையைத் தனதாக்கிக் கொண்டவர்.

இவர் கன்னியரைக் குறி வைத்துப் பாடும் **திருவெம்பாவை** உயர் சந்தமும் அழகுறு வார்த்தைச் செழுமையும் உடையதாய் அவர்களை நல்லாற்றுப் படுத்தும் உளநலத்திறனின் விரிவாயும் (– இன்றைய டாக்டர் பில் (Dr. Phil) –) அமைகிறது.

முதற் கட்டமாகக் கன்னிமையின் (sweet seventeen) அழகை இவர் இரட்சித்துக் கூறி அவர்கள் சித்தத்தைத் தன் வசமாக்குகிறார். – நேரிழையீர், வாள்தடங்கண் மாதே, ஒண்ணித்திலநகையீர் (நல்ல இரசிப்புத் திறன்), தித்திக்கப் பேசுவீர் – அன்ன பல. அவர்களும் இவர் கூறுவதைக் கேட்கத் தயாராக இருக்கிறார்கள். வைகறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டமாகக் கலகலத்துக் கொண்டும் செல்லமாக ஒருவர்மேல் ஒருவர் கோபித்துக் கொண்டும் ஒருவரை ஒருவர் துயில் எழுப்புவதை பலவிதமாகக் கூறி அவர்கள் செயல்களில் தன் ஈர்ப்பை வெளிக்காட்டுகிறார்.

"வன்செவியோ நின்செவிதான்"

"போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன் ஆகாள் கிடந்தாள்"

"வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?"

"- - யாமாட்டோம் நீயே வந்து"

"எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்"

அடடா, திடீரென ஓரிடத்தில் இடற நயமாக அவர்கட்கு தன் அக்கறையைக் காட்டும் இடம் சிறப்பு

"மானே நீ நென்னலை நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன்" என்றாயே
இன்று
"சிவனே சிவனே என்று ஓலமிடினும் உணராய்"

பெண்களே கொடுத்த வாக்கில் தவறி விட்டீர்கள். இது கூடாது. நாளை உங்கள் நோன்பின் பயனாய் அமையும் நல்ல கணவனுக்கு அக்கினி சாட்சியாய்க் கூறும் மொழிகளையும் அழித்து விடுவாயோ? அம்மா நான் அஞ்சுமாறே. "வார்த்தை தவறி விட்டாய் கண்ணம்மா" - என்ற பாரதியாரின் உளச் சோகத்தை மாணிக்கவாசகர் மறைமுகமாக எடுத்துரைப்பது என்றும், எந்த நிலையிலும் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நிற்கிறது.

"உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்"

நல்ல கணவனை, இறை உணர்வு உடையவனை உங்கள் மனம் நாடுவது நன்று நீவிர் இருவீரும்

"இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கண் அரசை அடியேங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந் திகழ"

வாழ வேண்டும். இதுதான் இல்லறத்தின் மாண்பு.

சித்தம் அழகியார், உயர் குறிக்கோள் உடையராய் வாழும் மாண்பே மாண்பு என்பதை உள்ளன்புடன் எடுத்துரைக்கும் பெருமானின் மணிவார்த்தைகள் ஒவ்வொன்றும் சுவைக்கச் சுவைக்கத் தித்திக்கும் தேன் சொட்டுக்கள்.

இன்றைய பெருமை மிக்க விஞ்ஞானிகள் தொழில்நுட்ப உதவிகொண்டு நிறுவும் கோட்பாடுகளை எள்ளி நகையாடும் விதமாக "திருவண்டப் பகுதியிலும்" பௌதீக தாவர சங்கம உண்மைகளை "போற்றித் திரு அகவலிலும்" இவர் விரிப்பது இவரது ஞான நோக்கில் அண்ட சராசரம் படமாய் விரிவதைக் காணலாம். இத்தகைய பெருந்தகை வாழ்ந்த காலம் கி. பி. 2ம் நூற்றாண்டா? இல்லை 8ஆம் நூற்றாண்டா? "நரியைப் பரியாக்கினானை" என நாயன்மார் குறிப்பிடுவது இவருக்காய் இறைவன் மேற்கொண்ட திருவிளையாடல் என்பதால் 2ம் நூற்றாண்டென என் தமிழ் ஆசான் சு. நடேசபிள்ளை கொள்வதுண்டு. திருத்தொண்டத் தொகையில் இவர் இடம் பெறாததால் பலர் 8ம் நூற்றாண்டென்பதுமுண்டு. வாழ்ந்த காலம் எதுவெனினும் சங்கம் மருவிய காலப் பகுதியில் ஆழ்ந்த சிந்தனைத் தெளிவும் பிற்காலத்தைய பக்திப் பிரபாகமும் இவர் பாடல்களில் ஆழமாக அமைகின்றன.

தேர்ந்த கைவினைஞனால் அழகுற அளவான மாணிக்கக் கற்களைப் பொறுக்கிச் சரிபார்த்துப் பதித்த மணியாரத்தை "திருப்புலியூரானே ஏற்றுக்கொள் நீயே இதன் பொருள்" எனக் கூறி அவனுடன் இரண்டறக் கலந்த மணிவாசகன் திருவாய் மலர்ந்த திருவெம்பாவை மதிப்புமிக்க பெரும் கொள்ளுனர் வைரம்.

---

பக்கம் 35 இன் தொடர்ச்சி

திருவாதவூரடிகள் புராணம் பற்றிய பொதுவான ஒரு அறிமுகமே இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது. இந்நூலில் பக்தி, தத்துவம், ஆகிய அம்சங்களும் கடவுள்மாமுனிவரின் கவிதைத் திறன் என்ற அம்சமும் தனித்தனி விரித்துரைக்கப்பட வேண்டிய பொருட்பரப்பு உடையவை என்பதைச் சுட்டி, எனது இந்த அறிமுகக் குறிப்பை நிறைவு செய்கிறேன்.

-----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம் முற்றோதுவதோடு முடிந்ததா!

(பேரறிஞர் திரு. முருகவே. பரமநாதன்)

மறைஞான செல்வர்கள் பாடிய பாசுரங்கள் தமிழில் இலட்சோப இலட்சம். இவற்றை வகுத்துத் தொகுத்தளித்தனர் சைவம் சார்ந்த சான்றோரும், வைணவம் போற்றும் ஜீயர்களும், ஞானிகளும். இலக்கியம், இதிகாசம், புராணம், பிரபந்தம் என்றெல்லாம் அவை வழக்காறு பெற்றன. இவற்றுள் அடங்காத தோத்திரமும் சாத்திரமும் வழிபாட்டையும், சமய நுண்மாண் நுழை புலமையையும் சமயம் போற்றும் சமுதாய மத்தியில் நிலைபெறச் செய்தன. பக்திநெறிகளில் ஒன்று இறைவனைத் தோத்தரித்தல். இவ்வகுப்பில் வருவன சைவத் திருமுறைகள் பன்னிரண்டும், பன்னிரு ஆழ்வார்களின் அருளிச் செயல்களான திருநாலாயிரத் திவ்வியப் பிரபந்தமுமாகும். இவ்விரு துறைகளிலும் ஆழங்காற்பட்ட கலைமாச் செல்வர்கள் இவற்றில் மிக்க ஈடுபாடுடையர் ஆயினர். எனவே இவற்றை ஆண்டுதோறும் குறிப்பிட்ட கால வேளையில் படனம் (பாராயணம்) செய்யும் வழக்காற்றை அமுல் படுத்தினார்கள். எனவே ஆலயங்கள், ஆதீனங்கள், சமயக் கழகங்கள், சமயஞ் சார்ந்த பொது மன்றுகள், சைவ வைணவப் பெரியோர்கள் இல்லங்கள் தோறும் இப்பாராயணம் வெகு புனிதமாக மேற்கொள்ளப்பட்டது. இம்மரபு நெறியிற் திருவாசகம் முற்றோதும் விழா நடைமுறைப் படுத்தப்பட்டது. சமயம் சார்ந்த பண்பாட்டியலின் ஒரு அங்கமான கோயில்தோறும் இம்முற்றோதல் நல்ல பயனை அளிப்பதை நாம் அனுபவத்திற் காண முடிகிறது. ஆயினும் திருவாசக முற்றோதலுடன் நம் தொழிற்பாடு நின்று விடுவதா? முற்ற முழுக்க எம் உடலோடும் உயிரோடும், உள்ளத்தோடும், வாழ்வோடும் ஒன்றிக் கலந்து கரைய வேண்டிய திருமுறைதான் திருவாசகம்.

தோத்திரமே வடிவான தோத்தரிப்போர் உள்ளத்தை உருக்கி, உயிரை உயிர்க்குயிரான இறைவனோடு இரண்டறக் கலக்கச் செய்வதுதான் இப்பிரபந்தம். இதை அருளிப் போந்த சுவாமிகள் எப்படிப் பாடிப் பாடி இறைவனோடு தன்னைக் கரைத்தாரோ, அஃதே போன்று சைவ சமயிகள் ஒவ்வொருவரும் திருவாசகத்தோடும், அதைப்பாடிய வாதவூரராம் மணிவாசகரோடும் கரந்து அவ்வழி ஆடல் வல்லானோடு கரைந்து மறைய வேண்டும். இதற்கு ஆற்றுப் படுத்தும் நெறிப்பாடுகளின் முதற் தளம் திருவாசகம் முற்றோதுதல். இதைப் படிப்பவரோடு மட்டும் தொடர்பு படாமல், கேட்போர், அனுபவிப்போர், மெய்யுருகுவோரை ஊடகமாக்கித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசக உணர்வலைகள் உள்ளந்தோறும், உள்ளுதோறும் உயிர்வழி பாய வேண்டும். இப்படியான சாதனா மார்க்கம் முற்ற முழுக்க மனோரம்மியத்தையும், ஆனந்தத்தையும் அளிப்பதனால் ஒரு மன அமைதி பெற வழிவகுக்கும். எனவே முற்றும் ஓதுவதால் மனம் முற்றி முதிர்ந்து கனிந்து பழமாக வேண்டும். அதனால் ஒரு முற்றுணர்வு வெளிப்படும். எனவே திருவாசகத்தினால் நாம் முற்ற வேண்டும் முதிர வேண்டும். எனவே முதிர்ந்த அறிவு தெளிந்த ஞானத்தைக் கொடுக்கும். முதிர்ந்த அன்பால் இறைவனே மனம் குழைவான். முதிர்வில் வரும் கனி தரும் சுவை தித்திக்கும். எனவே தேனூறும் வாசகங்கள் பயனூறும் பாமாலையாகி நயனூறும் நன்மை தரும். ஆக, முற்றோதுவதோடு முடிந்துவிட்டது என நாம் எண்ணி ஏமாந்து விடக்கூடாது. ஆதலின் பழமுதிர்ச் சோலையான திருவாசகத்தை அனுபவித்துத் திருவாசகக் கனி நயக்க நாளும் பொழுதும் திருவாசகத்தையே ஓதி வந்தாற்றான் முதிர்ந்த அனுபவம் பெறலாம்.

இந்தப் பாரிய பணியில் வாழ்ந்த சுவாமிகள் பல பாடல்களில் பாடவேண்டும் என்றே பேசுகிறார் தாம் பக்குவம் பெற. நாமும் அவர்களின் பாதச்சுவட்டிலே பணிவுடன் நடந்தாற்றான் திருவாசகப் பயனைப் பெறலாம். திருவாசகத்தில் வரும் மூன்று பாசுரங்கள் மணிவாசகரது மனோதர்மத்தை இப்படிப் பளீச்சிட்டுப் படம் பிடிக்கின்றன.

பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந்து உருகி நெக்குநெக்கு
ஆட வேண்டும்நான் போற்றி அம்பலத்து
ஆடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி இப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்து
அருளு போற்றி நின்மெய்யர் மெய்யனே. (5-100)

பாடிற்றி லேன்பணி யேன்மணி
நீ ஒளித்தாய்க்குப் பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண்டாய்
வியந்து ஆங்கு அலறித்
தேடிற்றி லேன்சிவன் எவ்விடத்
தான்எவர் கண்டனர் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிற்றிலேன் கிடந்து உள்ளுருகேன்
நின்று உழைத்தனனே. (6-45)

ஆடு கின்றிலை கூத்துடையான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோறு அலறிலை செய்வது ஒன்று அறியேனே.
(5-31)

இத்திருவாசகங்கள் பேசும் படினங்கள் நம்மோடு படியின் மனம் படிந்து, மாதவன் பாற்படும். பாடுதல், ஆடுதல், மெய்யுருகி நிற்றல், அன்பு பாய்ச்சுதல் மனம் குழைதல் போன்ற செயற்பாடுகள் போலியாய் இல்லாமல், பொய்மை கலவாமல் உண்மையாய் அமைந்து நம்மை நன்னெறிக்கு உய்க்கும். எல்லையற்ற இறைவனை மனம் செல்லும் வரை நினைப்பதும், தீர்ந்த, முதிர்ந்த மெய்யன்போடு வழிபடுவதும், கற்றாவின் மனம்போலக் கசிந்து உருகும் பண்பைப் பெறுவதும் ஒவ்வொரு பக்குவ ஆன்மாக்களின் இணையிலாக் கடமையாகும்.

இறைவனோடு பேசிய திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளை பாடியாடித்தும் பனிமதி முகத்திலே நிலவனைய புன்னையோர்த்து கண்மாரி சொரிந்து பரவசமாய்க் கனிந்த பெருநிலையின் பிழிவான திருவாசகம் முற்றோதவும், முற்றுமோதவும், முதிர்சுவை பெறவும் முதிர்ச்சியும் முழுமையும் பெறவும் தினமும் ஓதி உணர வேண்டும். முற்றோதலுக்கு, முறையாய் ஓதுவதற்கும் நாம் திருவாசக ஈடுபாடு உடையவர்களாய் இருத்தல் வேண்டும். எனவே முற்றோதலோடு முற்றிற்று என வாழா இருத்தல் கூடாது. தினக் கடமைகளில் ஒன்றாய் திருவாசகம் படித்தல் அமையட்டும்.

காப்பாய் படைப்பாய் கரப்பாய்முழுதும்
கண்ணார் விசும்பின் விண்ணோர்க்கெல்லாம்
மூப்பாய் மூவா முதலாய்நின்ற
முதல்வா முன்னே எனை ஆண்ட
பார்ப்பானே எம் பரமாஎன்று
பாடிப் பாடிப் பணிந்து பாதப்
பூப்போது அணைவது என்று-கொல்லோ-என்
பொல்லா மணியைப் புணர்ந்தே. (27-10)

- - - -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாதவூரடிகள் புராணம்

- ஓர் அறிமுகம்

(திருமதி கௌசல்யா சுப்பிரமணியன் M.A.)

**தோற்றுவாய்**

சைவசமய குரவர் நால்வருள் முதல் மூவரான அப்பர். சம்பந்தர், சுந்தரர், ஆகியோர் தொடர்பான வாழ்வியல் செய்திகளை நாம் அறிவதற்குத் துணைபுரியும் முக்கிய ஆக்கம் **திருத்தொண்டர் புராணம்** எனப்படும் **பெரிய புராணம்** ஆகும். அவ் இலக்கியத்தில் நான்காமவரான மணிவாசகர் பற்றிய செய்திகள் இடம் பெறவில்லை. இந்த நான்காமவரைப்பற்றி நாம் அறிவதற்குத் துணை புரியும் முக்கிய ஆக்கம் கடவுள் மாமுனிவரின் **திருவாதவூரடிகள் புராணம்** ஆகும். இதைவிட பெரும்பற்றப் புலியூர்நம்பியின் **திருவிளையாடற் புராணம்**, பரஞ்சோதி முனிவரின் **திருவிளையாடற் புராணம்,** மற்றும் **திருப்பாதிரிப்புலியூர் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், திருவுத்தரகோச மங்கைப் புராணம்** முதலியன உள. இவற்றுள் திருவாதவூரடிகள் புராணமே அவருடைய வாழ்க்கையை பற்றிய செய்திகளை முழுநிலையில் தொகுத்துத் தருவதான அமைப்புடன் திகழ்கிறது. எனவே இப்புராாணமே மணிவாசகரின் வரலாறு கூறும் முக்கிய புராண ஆதாரம் எனச் சைவப் பெருமக்கள் போற்றிப் பேணி வந்துள்ளனர்; வருகின்றனர்.

குறிப்பாக ஈழத்துச் சைவ மரபிலே மார்கழி மாதத் திருவெம்பா நாட்களில் இப்புராணத்தைக் கோயில்களில் படித்துப் பயன்கூறும் (புராணபடனம்) மரபு நீண்ட காலமாக நிலவி வருகின்றது. ஈழத்துத் தமிழ் அறிஞர்களில் ஒருவரான உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்களும் தமிழகத்திலே பு. சி. புன்னைவனநாத முதலியார் அவர்களும் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார்கள். இவ்வாறு பேணப்பட்டு வரும் இந்நூல் பற்றிச் சில அறிமுகக் குறிப்புக்களை முன் வைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

**உள்ளடக்கமும் அமைப்பும்**

இந்நூல் திருவாதவூரடிகள் பிறந்தது முதல் நிறைவடைந்தது வரையான செய்திகளைப் பல கட்டங்களாக வகுத்துரைப்பது. அவர் திருவாதவூரில் பிறந்தது; பாண்டிய மன்னனிடம் முதல் அமைச்சராகப் பதவி வகித்தது; பின்னர் குதிரை வாங்கச் சென்றது; அப்பிராயாணத்திலே திருப்பெருந்துறையிலே இறைவனாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானாசிரியரிடம் தீட்சை பெற்றது; குதிரை வாங்கக் கொண்டு சென்ற பணத்தைச் சிவ புணியங்களுக்குச் செலவு செய்தது; அதன் விளைவாகப் பாண்டிய மன்னனிடம் தண்டனை பெற்றுத் தேனினும் இனிய திருவாசகப் பாக்களைத் தலம் தோறும் சென்று பாடியது; பின்னர் தில்லையிலே புத்தரை வாதில் வென்றது; இறைவனுடன் இரண்டறக் கலந்தது என்பனவாக இவரது வாழ்க்கை வரலாற்றுக் கட்டங்கள் இந்நூலில் எடுத்துரைக்கப் படுகின்றன.

இவ்வாறான இவரது வாழ்க்கை வரலாற்றுக் கட்டங்களிலே சிவபிரான் நிகழ்த்திய இரண்டு திருவிளையாடல்களும் இடம் பெறுகின்றன. ஒன்று சிவபிரான் நரிகளையெல்லாம் குதிரையாக்கிக் கொண்டு தாம் குதிரைச் சேவகராக – பரிமேலழகராக – வந்த திருவிளையாடல் இன்னொன்று வைகைக் கரையிலே மண்சுமக்கும் கூலியாளராக வந்த திருவிளையாடல் ஆகும். இவ்வாறான கதை அம்சங்களை இணைத்து அமைந்த இந்தநூல் ஒரு வகையில் திருவாதவூரரின் வரலாற்றைப் பேசுவதாகவும் இன்னொரு வகையில் இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களைப் பேசுவதாகவும் இருமைப் பண்புடன் திகழ்கின்றது. இவ்வாறு அமையும் இப்புராணக் கதையம்சம் பாயிரம் முதல் திருவடி பெற்ற சருக்கம் ஈறாக எட்டு இயல்களிலே விரித்துரைக்கப்படுகின்றன. காப்புச் செய்யுளையும் சேர்த்து எல்லாமாக 545 விருத்தப்பாக்களில் இந்தப் புராணம் உருவாக்கப் பெற்றுள்ளது.

திருவாதவூரடிகளின் கதையைக் கூறும் முறைமையிலே கடவுள் மாமுனிவர் புலப்படுத்தியுள்ள பக்தி உணர்வு, தத்துவ அறிவு மற்றும் கவித்திறன் என்பன இங்கு நமது தனிக் கவனத்துக்கு உரியவை. கடவுள் மாமுனிவர் சிறந்த சிவபக்தர் என்பதும் சைவசித்தாந்தத் தத்துவத்திலே நன்கு ஊறித் திழைத்தவர் என்பதும் திருவாசகப் பாடல்களில் நல்ல பயிற்சி உடையவர் என்பதும் புராண மரபுகளை நன்கு கற்றுத் தேர்ந்தவர் என்பதும் இந்நூலாக்கத்தின் ஊடாக நமக்குத் தெரிய வருகின்றன. திருவாதவூரரின் பிறப்புத் தொடக்கம் அவரது பாத்திரப் பண்பு வளர்ச்சியடைந்து வருகின்ற செய்திகளை ஒரு ஞானகாவிய நாயகனுக்குரிய பண்புகளுடன் அவர் வளர்த்துச் செல்கிறார்.

பெரியபுராணத்திலே சேக்கிழார் ஞானசம்பந்தரை "ஞானத்தின் திருவுரு" எனச் சுட்டுவதைக் காண்போம். அதே போல கடவுள் மாமுனிவரும் தமது காவிய நாயகரை "ஞானத் திரகரன!" (ஞானசூரியன்) எனச் சுட்டுவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொய்ம்மையாம் உலகின்மாயப் பொங்கிருள் அகல வன்னோர்
தம்மையாழ் நரகில்தள்ளுஞ் சமயதாரகை மழுங்க
எம்மையாள் உடையான் அன்பர் இதயதாமரைகள் எல்லாஞ்
செம்மையாய் மலர ஞான தினகரர் உதயஞ்செய்தார்"

(மந்திரச்சருக்கம்–5)

திருவாதவூரடிகளின் பிறப்பானது உலகத்தில் இருக்கின்ற பொய்மைகள் என்ற மாய இருள் நீங்குவதற்கும் பிறசமயங்கள் எனப்படுவன புகழ் மங்குவதற்கும் சிவனடியார்களுடைய உள்ளம் சிறப்பாக மலர்ச்சி அடைவதற்கும் காரணமாக அமைந்தது என்பதே இப்பாடலின் தெளி பொருள். இங்கே இருள் நீங்குவது, நட்சத்திரங்கள் ஒளி இழப்பது, தாமரை மலர்கள் மலர்வது ஆகிய மூன்றுக்கும் சூரிய உதயம் காரணமாகின்றது என்ற இயற்கை நிகழ்வைப் பொருத்தி நோக்கி அவ்வகையில் மணிவாசகர் ஞானதிரகரனாகவே தோன்றினார் எனக் கடவுள் மாமுனிவர் உருவகித்துக் காட்டுந் திறன் இலக்கியச் சுவை என்ற வகையிலே நயந்து பாராட்டுதற்குரியது.

திருவாதவூரர் தமது *16* வயதுப் பிராயத்துக்குள் சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்தார் எனவும் அவரது அத் தகுதிப்பாட்டை அறிந்த அரிமர்த்தன பாண்டிய மன்னன் அவரை அழைத்து "தென்னவன் பிரம்மராயன்" என்ற விருதுப் பெயர் அளித்து முதலமைச்சர் ஆக்கினான் எனவும் கதை வளர்த்துச் செல்லப்படுகின்றது.

**கதையை வளர்த்துச் செல்லும் முறை:**

இவ்வாறு மந்திரிப்பதவி வகித்த வாதவூரர் மன்னனுக்குக் குதிரைகள் வாங்குவதற்காகத் திருப்பெருந்துறைக்குச் செல்கிறார். அங்கே குருந்த மர நிழலில் இருந்த ஒரு ஞானாசாரியரை அவர் தரிசித்தபோது அவரது வாழ்க்கையில் முக்கிய மாற்றம் ஏற்படுகின்றது எனக் கதைத்திருப்பம் அமைகின்றது. சிவபிரானே அவரை ஆட்கொள்வதற்கு ஞானாசாரியராக எழுந்தருளி வந்தார் என்று கூறப்படுகின்றது. அந்த ஞானாசாரியர் வாதவூரரை ஆட்கொள்ளும் வகையில் போதனைகள் வழங்கினார்.

இங்கே ஞானாசாரியர் வழங்கும் போதனைகள் அனைத்தும் சைவசித்தாந்தக் கருத்துக்களின் சாரம்மசமாகவே அமைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக உயிர்களின் இயல்பு, மலங்களின் இயல்பு, மலங்கள் நீங்குவதற்கான வழிமுறைகள், உயிர்கள் அடையக்கூடிய வீடுபேற்று நிலைகள் என்பன பற்றிய விளக்கங்களை சுவையான விருத்தப்பாக்களில் கடவுள் மாமுனிவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானாசிரியர் வாக்காக முன்வைக்கிறார். திருப்பெருந்துறைச் சருக்கத்தில் (64-74) வரையுள்ள 11 பாடல்கள் இவ்வாறான சைவசித்தாந்தத் தத்துவ சாரமாக உள்ளன.

இவ்வாறு போதனை பெற்ற திருவாதவூரடிகள் தாம் கொண்டு வந்த பொருள் அனைத்தையும் ஞானாசாரியாரிடம் ஒப்படைத்து அமைச்சர் அந்தஸ்துக்கான ஆடை அணிகள் அனைத்தையும் துறந்து ஒரு சிவனடியாருக்கான கோலம் கொள்கிறார்.

இந்நிலையில் மந்திரிப்பதவிக்குரிய கடமையில் தவறிய திருவாதவூரரை பாண்டிய மன்னன் பதவி நீக்கம் செய்து தண்டனைக்கு உட்படுத்துகின்றான். இத்தண்டனையில் இருந்து அவரைக் காக்கும் பொருட்டே சிவபிரான் நரிகளைக் குதிரைகள் ஆக்கியது, வைகைநதியைப் பெருக்கெடுத்து ஓடச் செய்து அக்கரையை அடைப்பதற்குத் தாமே கூலியாளாக வந்து மண் சமந்தது ஆகிய திருவிளையாடல்களை மேற்கொள்கிறார். இவை குதிரையிட்ட சருக்கம், மண்சுமந்த சருக்கம் ஆகியவைகளிலே விரிவாகப் பேசப்படுகின்ற செய்திகளாகும்.

குதிரையிட்ட சருக்கத்தில் சிவன் பெருந்தொகையான குதிரைகளோடு தாமே குதிரைச் சேவகராகி மதுரைக்கு வந்த காட்சி சுவையுடன் விரித்துரைக்கப்படுகிறது. குதிரை வருவதை அறிந்த மன்னன் வாதவூரரை விடுதலை செய்து மீண்டும் பதவி நல்கிறான். அவ்வாறு வந்த குதிரைகள் இரவில் நரிகளாக மாறிவிட மன்னனுக்குக் கடுங்கோபம் ஏற்படுகிறது. மீண்டும் வாதவூரரைப் பதவி நீக்கிச் சிறை செய்து தண்டிக்கிறான். இத்தண்டனையிலிருந்து வாதவூரரை மீட்பதற்காக இறைவன் வைகையைப் பெருக்கெடுக்கச் செய்கிறார்.

வாதவூரரைத் தண்டித்ததே வைகை பெருக்கெடுக்கக் காரணம் என்பதை உணர்ந்த பாண்டிய மன்னன் அவரை விடுவித்து மீண்டும் பதவியில் அமர்த்துகிறான். வைகைப் பெருக்கு ஓய்கிறது. ஆனாலும் பெருக்கெடுப்பின்போது ஏற்பட்ட உடைவுகளைச் செப்பனிடும் நோக்கில் வைகைக் கரை அடைக்கும் பணி வாதவூரர் மேற்பார்வையில் தொடங்குகிறது. இப்பணியில்தான் சிவபெருமான் கூலியாளராக வந்து மண்சுமக்கும் திருவிளையாடல் நடைபெறுகிறது. கரை கட்டும் பணியிலே சிவபிரான் செம்மனச் செல்வி என்பவருக்குக் கூலியாளராக வருகிறார். தன்னுடைய கரை கட்டும் பணியை அவர் பொறுப்புடன் மேற்கொள்ளாமல் விளையாடல் புரிகிறார். இந்நிலையிலே ஏவலாளர்கள் அவரைப் பிரம்பால் அடிக்கிறார்கள். அந்த அடி அனைத்து உயிர்கள் மேலும் விழுந்த அடியாகப் பேசப்படுகிறது. அடிவாங்கிய கணத்தில் சிவபிரான் மறைந்தருளினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபிரானே கூலியாளாராக வந்து மண் சுமந்த நிலை அறிந்த வாதவூரர் இறைவனின் பெருங்கருணையை எண்ணி உளம் மிக நெகிழ்ந்தார். மண் சுமந்த இடத்திலே விழுந்து புரண்டு அழுதார். அதன் பின்னர் மந்திரிப் பதவியைத் துறந்து பாண்டியனிடம் விடை பெற்றுக் கொண்டு திருபெருந்துறையிலே தன்னை ஆட்கொண்ட ஞானாசாரியிடம் செல்கிறார். அங்கு சென்று அவரைப் போற்றிப் பணிந்து மகிழ்ந்து அடியவர் கூட்டத்தில் சேர்ந்தார். இதன் பின்னர் திருவாதவூரரின் கதை இன்னொரு திருப்பத்தை எய்துகிறது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில், சிவபிரான் வாதவூரரை ஆட்கொள்ளும் பணி நிறைவெய்தி விட்டது என்ற வகையிலே கைலயங்கிரிக்கு மீள்கிறார். மீளும்பொழுது வாதவூரரை நோக்கி நீ பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு பின்னர் தில்லையம்பலத்தில் வந்து அங்கு புத்தரை வாதில் வென்ற பின்னர் என்பதம் எய்துவாயாக எனக் கூறிப் போகிறார். அவ்வாறு அவர் உரைத்தவாறே பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு அவ்வத் தலங்களிலே இறைவனைப்பாடித் துதித்துக் கொண்டு தில்லையை வந்தடைகிறார். தில்லையிலே புத்தரை வாதில் வென்ற நிகழ்ச்சி நடைபெறுகிறது. ஈழ நாட்டிலிருந்து வந்த புத்த பிக்குவை விவாதத்தில் தோற்கடிக்கிறார்.

தில்லையில் அவர் இருக்கும் நாளில் சிவபிரானே ஓர் அந்தணராக வேடந்தாங்கி வந்து அவர் பாடிய பக்திப் பாடல்களை அவர் வாயாலேயே சொல்லக் கேட்டு ஏடுகளில் எழுதிக் கொள்கிறார். இவ்வாறு மணிவாசகர் வாக்காக இறைவனால் எழுதிக் கொள்ளப்பட்ட பாடல்களே திருவாசகம் எனப் பெயர் பெறுவன. இவ்வாறு திருவாசகப் பாடல்களை எழுதிக்கொண்ட பின் அவர் வாதவூரடிகளை நோக்கித் தாங்கள் கோவை இலக்கியம் படைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார். அவ்வாறு அவ் அந்தணர் கேட்டுக்கொண்டபடி கோவை பாடுகிறார். அதையும் அந்த அந்ததணர் எழுதிக் கொள்கிறார். இந்தக் கோவையே திருக்கோவையர் அல்லது திருச்சிற்றம்பலக் கோவையார் என அழைக்கப்படும் இலக்கியமாகும்.

இவ்வாறு ஏடு எழுதிய சிவபிரானாகிய அந்தணர் அவ் ஏட்டுப் பிரதியை நிறைவு செய்து ஈற்றிலே திருச்சிற்றம்பலமுடையார் என ஒப்பமிட்டு அப்பிரதியை தில்லைச்சிற்றம்பலத் திருக்கோவிலில் பஞ்சாட்சரப்படியில் வைத்து மறைகிறார். மறுநாள் கோவிலைத் திறந்து பூசை செய்ய வந்த அந்தணர்கள் அவ் ஏட்டுக் கட்டைப் பார்த்து வியக்கின்றார்கள். அதைப் பிரித்து வாசிக்கிறார்கள். அப்பாடல்களின் பொருட் சுவையை நுகர விரும்பிய அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதவூரரிடம் வந்து இதன் பொருளை எங்களுக்கு எடுத்துக் கூறுங்கள் என்று கேட்கிறார்கள். அதைக் கேட்டு அவர்களுடன் தில்லைச்சிற்றம்பலத் திருக்கோலத்தைச் சென்ற வாதவூரர் இப்பாடலின் பொருள் இவரே எனத் தில்லை நடராசப் பெருமானுடைய திருக்கோவிலைச் சுட்டிக் காட்டியவாறே உள்ளே செல்கிறார். அப்படிச் சென்ற அவர் இறைவனோடு கலந்து விடுகிறார். இறைவன் தன்னோடு அவரை ஐக்கியப்படுத்திக் கொள்கிறார். பாலோடு நீர் கலந்தது போல இந்த ஐக்கியம் நிகழ்ந்தது என்கிறாா் கடவுள் மாமுனிவர்.

கடவுள் மாமுனிவர் வாக்காகக் கிடைக்கும் திருவாதவூரர் கதை அம்சம் இதுதான். இந்தக் கதை அம்சத்தைச் சொல்லுமிடத்து முன்னரே நாம் பார்த்தது போல் பக்திச்சுவை, தத்துவச்சுவை, இலக்கியச்சுவை என்பவற்றை நிறைந்தளவில் கலந்து வாசிப்பவர்களுக்கு சுவையுணர்வு தேக்கம் அடையாவண்ணம் கடவுள் மாமுனிவர் ஆற்றொழுக்காகக் கதையைக் கூறிச் செல்வதைக் காண முடியும்.

பல்வேறு தலங்களையும் திருவாதவூரர் தரிசித்துச் செல்லும் பொழுது அவ்வத் தலங்களில் அவர் என்னென்ன திருப்பதிகங்களைப் பாடினார் என்பதைக் கடவுள்மாமுனிவர் எடுத்துக் காட்டுகிறார். மேலும் புத்தரை வாதில் வென்ற கட்டத்தை எடுத்துப் பேசும்பொழுது பௌத்த சமயக் கருத்துக்கள், சைவசமயக் கருத்துக்கள் குறிப்பாகச் சித்தாந்தக் கருத்துக்கள் என்பவற்றை எடுத்துக் கூறி விவாதக் களத்தை சுவைபடுத்துகிறார்.

**நிறைவாக....**

ஒட்டுமொத்தமாக நோக்கும் பொழுது (மணிவாசகரின்) திருவாதவூரடிகளின் வாழ்க்கையை அருகில் நின்று பதிவு செய்தவர்போல இப்புராணத்தைப் பாடுகிறார் என்பது தெரிகிறது. பாடற்தொகையிலே **பெரிய புராணத்தை**விட ஏறத்தாள எட்டில் ஒரு (1/8) பகுதி சிறியது இந்த இலக்கியம். ஆனால் இலக்கியச்சுவை, பக்திச்சுவை, தத்துவச்சுவை என்பவற்றைப் பொருத்தவகையில் பெரியபுராணத்திற்கு நிகரான இன்னொரு திருத்தொண்டர் புராணமாக இந்த இலக்கியம் அமைகிறது என்பது எனது கணிப்பாகும். திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் படித்துச் சுவைப்பவர்கள் அவற்றைப் படைத்தவர் எப்படி இருப்பார் என்று கற்பனை செய்வார்களோ அக்கற்பனைக்குச் சற்றும் குறையாத வகையில் திருவாதவூரடிகளைக் கடவுள் மாமுனிவர் நமக்குக் காட்ட முயன்றுள்ளார். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளார் எனலாம்.

... தொடர்ச்சி பக்கம் 26 இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுவர் பகுதி**



## மாணிக்கவாசகர் திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள் பாண்டி நாட்டில் உள்ள திருவாதவூரில் பிறந்தார். இவர் தந்தையார் **சம்புபாதாசிரியர்.** தாயார் **சிவஞானவதி அம்மையார்.** இவரது அறிவின் திறனையும், பெருமையையும் அறிந்த பாண்டிய மன்னன் இவரைத் தன் அமைச்சராக்கிக் கொண்டான். திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் சிவபிரானால் ஆட்கொள்ளப் பெற்றார்.

பக்திச்சுவை மிக்க இனிய திருவாசகத்தை இவர் பாடியருளினார். சிவபெருமான் திருவருளினால் நரியைக் குதிரையாக்கிக் கொண்டு வந்து உதவி செய்யப் பெற்றார். புத்தர்களை வாதில் வென்று சைவசமய உண்மையை நிலைநிறுத்தினார். ஊமைப் பெண்ணைப் பேசுவித்தார். இத்தகைய அற்புதங்களைச் செய்து ஊர் ஊராகச் சென்று சிவபிரானை வணங்கி வந்தார்.

பல சிவதலங்களையும் தரிசித்து வணங்கிய மாணிக்கவாசகர் சிதம்பரமே எவற்றினும் மேலான தலமெனக் கண்டு அங்கு சென்றார். அத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் நடராசப்பெருமான், பக்த சிகாமணியான மாணிக்கவாசகர் திருவாசகம் முழுவதையும் சொல்லத் தம் அருமைத் திருகரங்களால் ஓர் ஏட்டில் வரைந்து அருளினார்.

ஒருகால் கேட்பினும், உருகாமனமும் அழல் வாய்ப்பட்ட மெழுகுபோல் உருகும் திருவாசகத்தை இயற்றிய மாணிக்கவாசகப் பெருமான் எல்லாருந் காண கனகசபையின் உள்ளே புகுந்து தில்லையில் உள்ளார் யாவரும் ஆனந்த பரவசமடையச் சிவசாயுச்சிய பதவியை அடைந்தார்.

அவற்றுள் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சிப் பதிகங்கள் சிறப்பாக மார்கழி மாதத்தில் ஓதப்படுபவை. அவற்றுள் ஒவ்வொரு பாடல்கள் கருத்துடன் தரப்படுகின்றன

**திருவாசகம்:**
**திருவெம்பாவை - பாடல் 8**

கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்
    ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
    கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேல் ஓர் எம்பாவாய்.

கோழி கூவ, எங்கும் சிறு பறவைகள் ஒலிக்கின்றன; நாதசுரம் ஒலிக்க, எங்கும் வெண்சங்குகள் ஒலிக்கின்றன. நாங்கள் தனக்குவமை இல்லாப் பேரொளியை, ஒப்பற்ற பேரருளை, மேல் ஒன்றில்லாத மெய்ப்பொருளைப் பாடினோம். உனக்குக் கேட்கவில்லையா? வாழ்வாயாக! உன் உறக்கம் தான் எப்படிப்பட்டதோ! வாய் திறந்து ஒரு வார்த்தை சொல். அருட்பெருங் கடலாகிய எம்பெருமானுக்கு அன்பு செய்யும் முறை இப்படித்தானோ? ஊழிக்காலத்தில் தனி முதல்வனாய்த் திகழும் ஒப்பற்ற தலைவனை, உமையொரு பாகனையே பாடுவாயாக.

## திருப்பள்ளியெழுச்சி - பாடல் 5

"பூதங்கள் தோறும்நின் றாய்" எனின் அல்லால்
"போக்கிலன் வரவிலன்" எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா!
சிந்தனைக் கும்அரி யாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே!

குளிர்ச்சி பொருந்தியவயல்கள் சூழ்ந்த திருப்பெருந் துறையில் வீற்றிருக்கும் அரசனே! உன்னை ஞானியர்கள், பூதங்கள் எல்லாவற்றிலும் கலந்து நிற்கின்றாய் என்கின்றனர்; அது மட்டுமல்லாமல் பிறப்பில்லாதவன் இறப்பில்லாதவன் என்று இசைப்பாடல்கள் பாடுகின்றனர்; ஆடுகின்றனர் ஆனால், உன்னை நேரே கண்டு அறிந்தவர்களை நாங்கள் காதால் கேட்டும் அறிந்திலோம். நீ, சிந்தனைக்கும் எட்டாதவனாய் நிற்கின்றாய்! எங்கள் கண்முன்னே வந்து திருக்காட்சி வழங்கி எங்கள் குற்றங்களை எல்லாம் நீக்கி எங்களை அடிமையாக ஏற்று அருள் செய்கின்ற எம்பெருமானே, பள்ளி எழுந்து அருள்வாயாக!

----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சித்தாந்த மன்றம், கனடா
Saiva Sidhdhantha Manram, Canada
1008-50 Elm Dr. E., Mississauga, ON L5A 3X2 Canada
(905) 566-4822

பெறுநர் To:

_______________

_______________

_______________


புதிய பல் மருத்துவமனை
குடும்ப பல் மருத்துவர்




**Dr. Vanathy Jeevakumar**

டாக்டர் திருமதி வானதி ஜீவகுமார்

*Dundas Dental Centre*

29C Dundas Street East
Mississauga, Ont., L5A 1V9
(Hurontario/Dundas)




சகல பல் மருத்துவ சேவைகள்
(Including Braces Implants)
வாரத்தில் ஏழு நாட்கள்

Phone **(905) 281-0273**
Fax: (905) 281-8792


## அன்புநெறி சந்தா விபரம்

தனிப்பிரதி **$1.00,** வருடச் சந்தா (12 இதழ்கள்) **$10.00.**
(நேரில் பெறுவோருக்கு)

**அஞ்சல் பொதிச் செலவுடன் வருடச் சந்தா:-**

| | |
|---|---|
| கனடா: | CAN $25.00 |
| அமெரிக்கா: | US $25.00 |
| ஏனைய நாடுகள்: | US $30.00 / GBP 20.00 |

தொடர்புகட்கு: சைவசித்தாந்த மன்றம், கனடா
**Saiva Sidhdhantha Manram, Canada**
**1008-50 Elm Dr. E., Mississauga, ON**
**L5A 3X2 Canada**
**(905) 566-4822**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org